Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 17 செவ்வாய்க்கிழமை (02.09.2014) பக்கங்கள் 20 ஓசை – 336

## ஜப்பானிய பிரதமர் அடுத்த வாரம் கொழும்புக்கு

(கொழும்பு)

ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று எதிர்வரும் 7 ஆம் திகதி கொழும்பு வருவார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ பயணமாக இலங்கை வரும் அவர் பொருளாதார, வர்த்தக உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜப்பானுக்கு பயணம் மேற்கொண்ட இலங்கை ஜனாதிபதி, ஜப்பானியப் பிரதமரை இலங்கை வருமாறு கேட்டிருந்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்று ஜப்பானியப் பிரதமர் இலங்கை வருகிறார் என்றும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் இந்தப் பயணத்தின்போது அவர் அரசதரப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவார் என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

## பாலா தம்பு காலமானார்



(கொழும்பு)

மூத்த தொழிற்சங்கவாதியும் லங்கா சமசமாஜக் கட்சியின் முன்னோடிகளில் ஒருவருமான பாலா தம்பு கொழும்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசுடன் இணைந்து செயற்பட வேண்டும்

### வடமாகாண சபையிடம் யாழ். ஆயர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு தமிழ் மக்களின் எதிர்கால நலன்களைக் கருத்திற் கொண்டு இனியாவது வடக்கு மாகாணசபை மத்திய அரசுடன் இணைந்து செயற்படவேண்டும் என்று யாழ். ஆயர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனையும் தனித்தனியாக சந்தித்து உரையாடிய பின்னர் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கத்தோலிக்க வார இதழான பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# யதார்த்தம் புரிந்து பணியாற்ற வேண்டும்



### புதிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளரிடம் அரசு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கள யதார்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு புதிதாக நியமிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் செயற்படவேண்டும் என்றும் அவ்வாறான நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் ஜோர்தான் பிரதிநிதி இளவரசர் சையத ராஅத் அல் ஹுசைன் (Zeid Ra'ad Al Hussein) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் புதிய ஆணையாளராக பதவியேற்றுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக செயற்பட்ட நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளமையினால் புதிய ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற இரண்டு ஊடகவியலாளர் சந்திப்புக்களில் அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல்ல மற்றும் மகிந்த சமரசிங்க ஆகியோர் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்தனர்.

நாம் அனைத்தையும் சிறந்த முறையிலேயே சிந்திப்போம். எனினும் எவ்வேளையிலும் அதற்கு மாறாக செயற்பட்டதில்லை. குறிப்பாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளராக செயற்பட்ட நவநீதம்பிள்ளை இலங்கை தொடர்பில் கொண்டு வந்த பிரேரணைகளை நாம் பகிரங்கமாக விவாதத்திற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## "உதவும் கரங்கள்" அமோக வரவேற்புடன் அமுலாக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

"உதவும் கரங்கள்" என்ற புதிய கடன் திட்டம் ஒன்று இப்பொழுது பொதுமக்களின் அதிக வரவேற்புடன் அமுலாக்கப்பட்டு வருகிறது.

வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிகளினால் தற்சமயம் விடுவிக்கப்படும் இலகு கடன் திட்டமாக "சஹன அருண" கடன் திட்டத்திற்கு "உதவும் கரங்கள்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். நகர் மேற்கு

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர் அத்துமீறலுக்கு கூட்டமைப்பின் அணுகுமுறையே காரணம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தவறான அணுகுமுறைதான் காரணம் என்றும், வடமாகாண அபிவிருத்திக்கு அரசும், ஆளுநரும் தடையாக இருப்பதாக கூட்டமைப்பினர் கூறிவருகின்றமை ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணலாக இருப்பது போன்று நகைப்பாக உள்ளது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கைதடியில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் நேற்று இடம்பெற்ற உதவும் கரங்கள் நிகழ்ச்சித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் வடக்கு மாகாண முதலமைச்சர் உரையாற்றும் போது ஹெலியில் வருபவர்களால் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியாது என தெரிவித்திருந்ததாக யாழிலிருந்து வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் வடக்கு மாகாண சபையை பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

## கண்ணிவெடி அகற்ற பிரித்தானியா நிதியுதவி

### யாழ். வந்த தூதுவர் தகவல்

(கொழும்பு)

பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீன் நேற்று வடபகுதிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது அவர் முகமாலையில் நிலக்கண்ணி அகற்றல் நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

இந்த நிலக்கண்ணி அகற்றல் நடவடிக்கைகள் பிரித்தானிய அரசாங்கத்தின் உதவியுடனேயே இடம்பெற்று வருகிறது.

இதன்போது கருத்துரைத்த ரங்கீன், வடக்கின் நிலக்கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கைகளில் நீண்ட காலமாக பிரித்தானியா செயற்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டார்.

2010 முதல் 2014 ஆம் ஆண்டுகளுக்காக மாத்திரம் தமது நாடு நிலக்கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கைகளுக்காக 3.5 மில்லியன் பவுண்ஸ்களை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அடுத்த 18 மாதங்களுக்காக 1.6 மில்லியன் பவுண்ஸ்களை

19 ஆம் பக்கம் பார்க்க

# மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் இனமுரண்பாடே வீழ்ச்சியை ஏற்படுத்தியது

## ஈ.பி.டி.பி.யின் வடமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன்



கடந்த காலங்களில் நாட்டில் காணப்பட்ட இன முரண்பாடுகளே எமது மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்தில் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அன்றைய தமிழ்த்தலைவர்கள் எனக் குறிப்பிட்டுக் கொள்பவர்கள் அரசாங்கத்தினால் நடைமுறைக்கு கொண்டுவரும் மக்கள் நலத்திட்டங்களை அரசியல் நோக்கில் சிந்தித்து அவை மக்களிடம் செல்லவிடாது தடை செய்தமையும் மக்களின் வாழ்வாதார வீழ்ச்சிக்கு காரணம் என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை. தவநாதன் தெரிவித்துளார்.

நேற்று ஜெயபுரத்தில் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் நடைமுறைக்கு வரும் உதவும் கரங்கள் வாழ்வாதாரக் கடன் வழங்கும் செயற்திட்டத்தினை ஆரம்பித்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

மீள்குடியேற்றத்திற்கு பின்பு ஒவ்வொரு குடும்பங்களுக்கும் போதுமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றும் எவ்வித வாழ்வாதார முன்னேற்றங்களும் எட்டப்படவில்லை. அதற்கு முக்கிய காரணம் கிடைக்கப்பெறும் உதவிகளை முறையாகப் பயன்படுத்தக்கூடிய திட்டமிடல்களுக்கூடாக பயன்படுத்தப்படாமையே ஆகும் எனவே கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களை, பற்றிப்பிடித்து முன்னேற முயற்சிக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர் சத்தியசீலன், பூநகரி பிரதே சபையின் உறுப்பினர் காசிம் மற்றும் ஜெயபுரம் சமுர்த்தி முகாமையார், கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஸ்கந்தபுரம் சமுர்த்தி வங்கிச் சங்கத்திற்குட்பட்ட கிராமங்களைச் சேர்ந்த வாழ்வின் எழுச்சித்திட்டப் பயனாளிகளுக்கும் குறித்த திட்டத்தினூடாக வாழ்வாதார மேம்பாட்டுக்கான கடன் மற்றும் சுயதொழில் மேம்பாட்டுக்கான கடன் வழங்கும் செயற்பாடுகளையும் வடக்கு மாகாணசபை உறுப்பினர் வை.தவநாதன் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் சபாநாயகம், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி திட்ட இணைப்பாளர் சிவகுமார். சமுர்த்திதிட்ட கண்காணிப்பு மேற்பார்வையாளர் குபேரன் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் கிராம அலுவலர்கள், சமுர்த்தி பயனாளிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# ‘சஹன அருண’ கடன் திட்டம்

(முல்லைத்தீவு)

திவிநெகும வாழ்வெழுச்சி சமுதாய வங்கி மூலம் ‘சஹன அருண’ கடன் திட்டம் வவுனியா வடக்கில் நெடுங்கேணி பிரதேச பிரிவில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுயதொழில் கடனாக சிலாவத்தையில் 5 பயனாளிகளுக்கும், அளம்பில் கிராமத்தில் 5 பயனாளிகளுக்கும், முள்ளியவளை கிராமத்தில் 5 பயனாளிகளுக்கும் முதற்கட்டமாக கடன் வழங்கப்பட்டுள்ளது. (40)

# விபத்தில் சிக்கி முதியவர் காயம்

இராணுவ வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் கொக்குவிலைச் சேர்ந்த சோமசுந்தரம் (வயது-74) என்ற முதியவரே படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த வயோதிபரும், அவரது உறவினரும் மோட்டார் சைக்கிளில் மண்டைதீவிலுள்ள ஒரு ஆலயமொன்றின் உற்சவத்திற்காகச் சென்ற வேளையில் சிறிலங்கா ரெலிக்கொம் அருகில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# வாகன விபத்தில் சாரதி படுகாயம்

ஆவரங்காலில் நேற்றுக்காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களணி பிரதேசத்தைச் சேர்ந்த சுதத் (வயது-51) என்ற சாரதியே காயமடைந்துள்ளார்.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்களை கொழும்பிலிருந்து ஏற்றி வந்த ஹண்ரர் ரக வாகனமே வேகக்கட்டுப்பாட்டை இழந்து மதில் சுவருடன் மோதியுள்ளதாக அச்சுவேலி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் வாகனம் முழுமையாகச் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ,85)

# உறக்கத்தில் கோடாரிக் கொத்து; வயோதிபர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

உறக்கத்திலிருந்த வேளையில் கோடாரிக் கொத்துக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் வயோதிபர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மணல் பகுதி, ஆவரங்கால், புத்தூரில் இச்சம்பவம் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த ச.செல்லையா (வயது-70) என்ற வயோதிபரே படுகாயமடைந்துள்ளார்.

முன்னர் இருந்த பகையாலேயே இவ்வாறு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும், இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பு மூட்டியவருக்கு தீக்காயம்

மண்ணெண்ணெய் ஊற்றி அடுப்பு மூட்டிய பெண்ணொருவர் தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 6.00 மணியளவில் இச்சம்பவம் தனங்கிளப்பு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் ஜெயசித்திரா (வயது-35) என்ற இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு தீக்காயங்களுக்கு ஆளாகியுள்ளார்.

நேற்றுக்காலை பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு தேநீர் தயாரிக்க அடுப்பில் விறகை வைத்து மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய வேளையிலேயே இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

# புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சை தெல்லிப்பளையில் மீண்டும் ஆரம்பம்

தெல்லிப்பளையில் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கதிர்வீச்சு இயந்திரத்தின் மூலப்பொருள் பழுதடைந்து மாற்றவேண்டிய காரணத்தினால் கடந்த ஐந்து நாட்களாக கதிர்வீச்சு சிகிச்சைகள் இடம்பெறவில்லை. நேற்று இயந்திரத்தின் மூலப்பொருள் மாற்றப்பட்டுள்ளதுடன், இயங்கத் தொடங்கியுள்ளது.

எனவே, இன்று முதல் இக்கதிர்வீச்சு சிகிச்சை பெறும் நோயாளர்கள் தமக்கான சிகிச்சையை தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையில் மேற்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லாத பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாது

## யாழ்.பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வழித்தட அனுமதிப்பத்திரம் இல்லாத எந்தவொரு பேருந்தும் நேற்று முதல் சேவையில் ஈடுபட முடியாது என யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருடன் தனியார் பஸ் உரிமையாளர்கள் கலந்துரையாடிய போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.-கொழும்பு நெடுந்தூர பேருந்துச் சேவையில் ஈடுபடுகின்ற அநேக பேருந்துகளுக்கு வழித்தட அனுமதி வழங்கப்படவில்லை. இது விடயம் தொடர்பில் கால அவகாசம் பேருந்து உரிமையாளர்களினால் கோரப்பட்ட போதிலும் அவ்வாறு வழங்க முடியாது என பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டதுடன், இந்த விடயம் குறித்து உரிய அமைச்சருடன் பேசி உரிமையாளர்கள் நேரடியாகச் சென்று இதற்கான தீர்வு எட்ட எம்மால் உதவ முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இவர்களுக்கு 8 மாத கால அவகாசம் ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தது.

2010 ஆம் ஆண்டு இவ்வாறு 154 பேருந்துகளுக்கு வழித்தட அனுமதி கோரியபோது இதில் 81 அனுமதிகள் வழங்கப்பட்ட போதும், தற்போது 48 அனுமதிப்பத்திரங்களே உள்ளன. இதில் லக்சிறி பேருந்து 28, அரைச் சொகுசு பேருந்து 20 என்பவற்றுக்கே வழித்தட அனுமதிப்பத்திரம் உண்டு.

இவ்வாறு சொகுசு லக்சிறி பேருந்துகளுக்கான வழித்தட அனுமதிக்கு 11 இலட்சம் ரூபாவும், அரை சொகுசு பேருந்துகளுக்கான வழித்தட அனுமதிக்கு 7 இலட்சம் ரூபாவும் செலுத்த வேண்டியுள்ளது.

இதனால் தமது சேவையைச் மேற்கொள்வதில், பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்வதாக தெரிவித்து நேற்று முன்தினம் இரவு அனுமதிப்பத்திரம் அற்ற பேருந்து உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பு ஒன்றையும் நடத்தினர்.

இவ் விடயம் குறித்து நேற்று இடம்பெற்ற சந்திப்பில் அவ்வாறு பகிஷ்கரிக்காது அனுமதிப் பத்திரம் உள்ள பேருந்துகளைச் சேவையில் ஈடுபட இடமளிக்க வேண்டும் எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

வழித்தட அனுமதி வழங்கிய அமைச்சின் தவறான செயற்பாடே இதற்குக் காரணம் எனவும் பெரிய முதலாளிகளுக்கு அதிகளவில் அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

எனினும், வழித்தட அனுமதி பெறப்படும் வரை அனுமதியற்ற பேருந்துகள் சேவையில் ஈடுபட முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ,25)





## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3727)

# கல்விகற்க விரும்புவோருக்கு நிதி வசதியை வழங்கும் திட்டம்

## திசைகாட்டியின் நிறைவேற்று பிரதம அதிகாரி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

திசைகாட்டி நிறுவனம் விசா ஆலோசனைத்துறையில் வெளிநாடுகளில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கு நிதி வசதியை பெற்றுக் கொடுக்கும் திட்டமொன்றை அறிமுகப் படுத்தியிருப்பதாக திசைகாட்டி நிறுவனத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி வி.சிந்துஜா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து திசைகாட்டி நிறுவனத்தின் பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தியில் அமைந்துள்ள தலைமைப்பணிமனையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்விடயத்தைத் தெரிவித்துள்ளார். இ[illegible] ஊடகவியலாளர் சந்திப்பில் திசைகாட்டி நிறுவனத்தின் சர்வதேச தொடர்பாளர் எஸ்.சுபசீலனும் கலந்து கொண்டார். அவர் வெளிநாடுகளில் கல்வி பெறச்செல்லும் மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டிற்கான கடன்திட்டம் குறித்துத் தெரிவிக்கையில் திசை காட்டி நிறுவனத்தின் நான்கு வருட காலப்பயணத்தில் சவலாக அமைந்தது வெளிநாடுகளுக்கு கல்வி பெறச்செல்லும் மாணவர்களுக்கான நிதிவசதி செய்து கொடுப்பது என்பதே. வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழ்ந்துவரும் உறவினரை நம்பி பல் கலைக்கழகங்களிலோ அல்லது கல்வி நிறுவனங்களிலோ, கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் இந்த கல்வி நிறுவனங்களுக்கு கல்விக்கான கட்டணங்களை செலுத்துவதே பிரச்சினையாகவுள்ளது.

எனவே இந்தத் சர்ச்சைக்கு தீர்வு காணும் முகமாகவே திசை காட்டி நிறுவனம் நிதி நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி வங்கியின் மூலமாக கடனைப் பெற்றுக் கொடுக்கவும் ஒரு வருடத்திற்கு வட்டியை மட்டும் செலுத்தும் விதத்திலும் 13 வீத வட்டியிலும் கடனைப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்து தர முன்வந்திருப் பதாகவும் தெரிவித்தார்.

இந்தக்கடன் திட்டம் வெளிநாடுகளுக்கு கல்வியைப் பெறச் செல்லும் மாணவர்களுக்கான வரப்பிரசாதம் என்றும் குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாட்டுக்கு கல்வி பெறச் செல்லும் மாணவர்கள் தமது சொத்து விபரத்தை வைத்துக்கொண்டு நிதி நிறுவனத்தினரிடம் கடன்பெறுவதற்கு திசை காட்டி நிறுவனம் ஒழுங்குகளை செய்து கொடுக்கிறது என்றார். அரசாங்க நிதி நிறுவனங்கள், வங்கிகள் வெளிநாட்டுக்கான கல்வி உதவிபுரிகின்றோம் என்று விளம்பரம் செய்து சில திட்டங்களினை வைத்திருந்தாலும் நடைமுறையில் யாழ்ப்பாணத்தில் அதனால் ஒருவர் கூட பயனடையவில்லை என்று தெரிவித்தார்.

இரண்டு பேருக்கு இவ்வாறு கல்விக்கு கடன்பெற்றுக் கொடுத்து பரீட்சார்த்த முயற்சிக்குப்பின்னர் இத் திட்டம் தற்சமயம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்றார். (பா)

# விசமிகளின் நாசகாரவேலையால் புங்கன்குளம் வீதி மின்விளக்கு செயலிழப்பு

கொழும்புத்துறை புங்கன்குளம் வீதியில் இலங்கை மின்சார சபையினால் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்குகள் சில செயலிழந்து காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். முன்னர் செயலிழந்து காணப்பட்ட மின் விளக்குகள் கடந்த இரண்டு மாதங்களாக வீதிகளுக்கு ஒளி வழங்கியதாகவும் தற்போது ஒரு வாரமாக சில விசமிகளின் நாசகார வேலையால் அந்த மின்விளக்குகள் செயலிழந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மின்கம்பங்களுக்கு அருகிலுள்ள வீடுகளில் குடியிருப்பாளர்கள் இல்லாததால் மாலை 6 மணிக்குப் பின்னர் அந்த வீடுகளுக்குள் சில விஷமிகள் நின்று மது அருந்துவதுடன் களவாக மரங்களை வெட்டியும் செல்கின்றதாகவும் இதனால் தமது கொள்ளை முயற்சிகளுக்கு இடையூறாக இந்த வீதி விளக்குகள் இருப்பதனால் அதனை செயலிழக்கச் செய்திருக்கலாம் எனவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். அதுமட்டுமன்றி இந்த கொள்ளையர்களாலும் இரவில் பயணம் செய்வோர் பல இன்னல்களுக்கு முகங்கொடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மக்களின் அச்சத்தைக் போக்கும் வகையில் மின்சாரத்தை வழங்க வேண்டுமெனவும் திருட்டில் ஈடுபடுவோரைக் கைது வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (51)



கைதடி மேற்கு இனுங்கித் தோட்ட அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா கடந்த சனிக்கிழமை ஆரம்பமான போது.... (51)

# திருவிழாக்கள் தொடருது... கஷ்டங்கள் முடியும் திருநாள்தான் வரக்காணோம்...








சில மாதங்களுக்கு முதல் யாழ்ப்பாணத்துக்கு பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் ஐயா வந்திருந்தவரல்லோ.

கமரூன் ஐயாவின்ர யாழ்ப்பாண விஜயத்தை வைச்சு ஒரு பெரிய 'பிலிம்' காட்டிச்சினம் தமிழ் பேப்பர்க்காரர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக்களும்.

வந்தார் கமரூன், இருந்தார் கமரூன், படுத்தார் கமரூன், சிரித்தார் கமரூன், சாப்பிட்டார் கமரூன், மூச்சுவிட்டார் கமரூன், ஒண்டுக்கு இருந்தார் கமரூன், தும்மினார் கமரூன், வந்த தும்மலை அடக்கினார் கமரூன் இப்பிடியே ஒரு ரெண்டு மாசம் கமரூன் புராணம்தான்.

இந்தப் புராணத்தை படிக்க படிக்க தமிழ்ச் சனங்களுக்கும் குண்டியில தட்டின புளுகம்.

கமரூன் என்றால் சும்மாவா. வெள்ளைக்காரத் துரையல்லோ. அதுவும் பிரித்தானியப் பிரதமரல்லோ.

இந்த வெள்ளைக்காரத் துரையோட ஒரு தேத்தண்ணி குடிச்சு, நாலு வார்த்தை பேசி, படத்தையும் எடுத்து அரசியல் திருவிழாவை படுசோக்காக நடத்திச்சுது கூட்டமைப்பு.

அந்த நாளில வந்த பேப்பர்களைப் படிச்சவை ஒரு தடவை இப்ப அதையெல்லாம் நினைச்சுப் பாக்க வேணும்.

கமரூனை யாழ்ப்பாணத்துக்கே கூட்டிக்கொண்டு வந்திட்டம்,... லைப்ரரி பல்கனியில எங்களோட நிண்டு கைகாட்டினதை பாத்தனீங்கள்தானே... எங்கட பத்திரிகை அலுவலகத்தை வந்து பாத்தவர்... சுன்னாகம் நலன்புரி நிலையத்துக்கும் ஆளைக் கூட்டிக்கொண்டு போய்க் காட்டினனாங்கள்... சரியான கோவத்தோட தான் திரும்பிப் போறார்... இலங்கை அரசாங்கம் இனித் தப்ப முடியாது... கடும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்... என்டெல்லாம் எத்தினை 'பில்டப்'புகள்!

கமரூன் திருவிழா பத்துநாள் தாக்குப்பிடிக்கேல்ல. அப்பிடியே புஷ்வாணமாகிப் போச்சு. அவர் இப்ப இலங்கைப் பிரச்சினை பற்றி எந்தக் கதையுமில்லை... இவை கேக்கிறதுமில்லை...

இப்ப அதைப்போல இன்னொரு திருவிழா தொடங்கியிருக்கு.

இது மோடி திருவிழா.

மோடி கூப்பிட்டார், மோடி தேத்தண்ணி தந்தார், மோடி சப்பாத்தியும் சாம்பாரும் கலந்து ஒரு பந்தி வைச்சார், நாங்கள் சொன்னதையெல்லாம் உன்னிப்பாகக் கேட்டார், இலங்கை அரசாங்கம் இனியும் இந்தியாவை ஏமாத்தேலாது... இப்பிடியே மோடி திருவிழாவுக்கும் ஏகப்பட்ட அலங்காரங்கள்.

ஐயோ தாங்க முடியலடா சாமி.

ஆனால், எப்பிடியோ காலத்திற்கு காலம் இந்தமாதிரி வாற திருவிழாக்களால தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர ஓட்டை வண்டியும் ஓடிக்கொண்டிருக்கு. சர்வதேசம் வந்து இலங்கை அரசாங்கத்தைத் தண்டிச்சுப்போட்டு தமிழாக்களின்ர கையில அதிகாரங்களைத் தந்திட்டுப்போற அந்தத் திருநாளைத்தான் இவர்கள் கொண்டுவரக் காணோம்... கிட்டவும் அதற்கான சமிக்ஞை தெரியக் காணோம்...

அரசியல் வியாபாரிகள் பழைய பாயாசத்தையும் புதுசா குடுக்கத்தான் பாப்பினம்.

ஆனால், சனங்களாகிய நாங்கள்தான் எல்லாத்திலையும் விழிப்பாக இருக்க வேணும்.

இல்லையெண்டால் எங்களுடைய தலைகள்தான் பழுதாகும்.

ஒத்தோடி ஒத்தோடி கேள்வியில்லாமல், விமர்சனங்களில்லாமல் துதிபாடி துதி பாடி முள்ளிவாய்க்காலில போய் நிண்டனாங்கள்.

இந்த அருமையான பாடத்தையே நாங்கள் படிக்கவில்லை எண்டால் எங்களை கடவுளாலேயே காப்பாற்ற முடியாது.

பிழையைச் சரிப்படுத்திக் கொள்ள முயற்சி செய்வதில் அவமானம் இல்லை. - ராஜாஜி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811,. thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நல்லதொரு ஆரம்பம்!?!

சிரிக்க வைப்பதில் இரண்டு வகையுண்டு. கோணங்கிச் சேட்டைகள் விளையாட்டுத்தனமான பேச்சுக்கள் மூலம் சிரிக்க வைப்பது ஒருவகையென்றால், சிரிக்காமல் முகத்தை வைத்துக் கொண்டு அபத்தமான ஒரே விஷயத்தையே சீரியஸாகப் பேசுவதன் மூலம் சிரிக்க வைப்பது மற்றொரு வகையெனலாம்.

இந்த இருவகையான சிரிப்பு மூட்டல்களையும் செய்து வெற்றி பெற்றதற்கு உதாரணமாக சமீபத்தில் வந்த 'மூடர் கூடம்' என்ற திரைப்படத்தைச் சொல்லலாம். சென்ட்ராயன் என்ற பாத்திரம் பலவித சேட்டைகள் செய்து சிரிக்க வைக்கும் அதே சமயம், நவீன் என்ற பாத்திரம் எப்போதும் சீரியஸாகவே பேசி நம்மை விழுந்து விழுந்து சிரிக்க வைப்பதாக அமைந்திருக்கும்.

நமது அரசியலிலும் இத்தகைய பாத்திரங்கள் உண்டு. மேர்வின் சில்வா, சிவாஜிலிங்கம் போன்றோர் முதல் வகைக்கு உதாரணம் என்றால், இரண்டாவது வகைக்கு பல தலைவர்கள் உதாரணத்திற்கு வருவார்கள்.

ஒரு கூட்டத்தில், இதோ, இத்தனையாவது நிமிஷத்தில் தலைவர் தன் கையிலேயே மற்றொரு கையால் ஓங்கிக் குத்தி தனது வழமையான சபதத்தை கழுத்து நரம்பு புடைக்க மைக்கில் ஆவேசமாக அறிவிப்பார் என்று அருகிலிருக்கும் நண்பர் நமக்குச் சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

சொன்னதுபோலவே, அத்தனையாவது நிமிஷத்தில், தலைவரின் கழுத்து நரம்பு புடைக்கும் சபதம் வரும்போது நம்மால் சிரிப்பை அடக்கிக் கொள்வது கஷ்டமாகத்தானிருக்கும். நம் தமிழ்த் தலைவர்கள் அத்தகைய சிரிப்பு வெடிகளைத் தொடர்ச்சியாகத் தந்துவருவதில் கில்லாடிகள்.

இந்தியப் பயணத்தால் திரும்பி வந்து இறங்கியவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் அளித்திருக்கும் பேட்டியை அப்படியே வரிக்கு வரி பார்ப்பவர்கள் குறைந்தது ஒரு ஐந்து வருடமாவது நமது அரசியலை அவதானித்து வருபவர்களாக இருந்தால் சிரிப்பை அடக்குவது சிரமமாகத்தானிருக்கும்.

அவர் கூறும் அந்த சீரியஸான மூன்று வார்த்தைகளும் இவை தான்:

"தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் நாம் இந்திய அரசின் தலைவர்களுடன் மிகவும் விரிவாகப் பேசினோம்."

"தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான நியாயமான, அவர்களுடைய கௌரவத்தை சுயமரியாதையை பாதுகாக்கக் கூடிய, அவர்களுடைய நியாயபூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் இந்தியா மிகவும் அக்கறையாக இருக்கின்றது."

"நரேந்திர மோடி தலைமையிலான அரசுடன் மேற்கொண்ட சந்திப்பு திருப்திகரமான நல்லதொரு ஆரம்பமாக அமைந்துள்ளது."

மக்களே நம்புங்கள்! கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் அவர்கள் இந்தியாவிலிருந்து வந்து கூறியிருப்பவை இவைதான்.

எப்போது தீர்வுக்கான முயற்சிகள் நடக்கப்போகின்றது, என்ன மாதிரியான தீர்வு, எப்படி அது வரும், இந்தியா என்ன செய்வதாக வாக்குறுதி அளித்துள்ளது... என்று எதுவுமே சொல்லாது, பயணம் திருப்தியாக முடிந்தது என்று தலைவர்கள் தங்கள் வெற்றியை அறிவிப்பது இது எத்தனையாவது முறை?!

எமது பிரச்சினைகளை தெளிவாக இவர்கள் எடுத்துரைப்பதும், அவர்கள் உன்னிப்பாக அதைக் கேட்டறிந்து கொள்வதும், இலங்கை அரசு அவ்வளவுதான் இனியும் ஏமாற்ற முடியாது என்று இவர்கள் இறுதி எச்சரிக்கையை விடுவதும் இது எத்தனையாவது முறை?!

எல்லாவற்றையும் தூக்கிச் சாப்பிடுவது போல சம்பந்தன் அவர்கள் சீரியஸாகச் சொல்கிறார், இப்போதுதான் நல்லதொரு ஆரம்பம் என்பதாக... அடக் கொடுமையே! - ஆசிரியர்.

# ஊவா தேர்தலில் பதுளை முஸ்லிம்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவளிப்பார்கள்

## - அஸ்வர் எம்.பி.தெரிவிப்பு -

ஊவா மாகாண சபை தேர்தலில் பதுளை மாவட்ட முஸ்லிம் வாக்காளர்கள் ஐக்கிய சுதந்திர முன்னணிக்கு வாக்களித்து வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்வது உறுதியாகி விட்டது என ஊடக அமைச்சின் மேற்பார்வை எம்.பி. ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

சில்மியாபுரம் பொரகஸ் பாதினாவெல பதுலுசிரிகம மற்றும் நெலும்கம ஆகிய இடங்களில் இடம்பெற்ற பிரசார கூட்டங்களின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பதுளை வாழ் முஸ்லிம்களின கல்வி வளர்ச்சிக்காக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா செய்துள்ள அபிவிருத்திப்பணிகள் பாரியவை. வேறு எந்த தலைவர்களாலும் செய்ய முடியாது என்பதை இப்பகுதி மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர்.

எவ்வித அபிவிருத்தியும் காணாது பின் தள்ளப்பட்ட பிரதேசமாக காணப்பட்ட சில்மியாபுரம் இன்று சகல துறைகளிலும் அபிவிருத்தி கண்ட பிரதேசமாக மாறியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலில் முதன்மை வேட்பாளராக களமிறங்கியுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேமா ரத்நாயக்காவை வெற்றி பெறச் செய்தது. இப்பகுதியின் அபிவிருத்திப் பணிகளை மேலும் முன்னெடுத்து செல்ல மக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

# சர்வதேச திரைப்படவிழா இன்று கொழும்பில்

2014 ஆம் ஆண்டுக்கான சர்வதேச திரைப்பட விழா ( IFF COLOMBO 2014) இன்று கொழும்பில் இட்ம்பெறவுள்ளது.

இலங்கையில் முதன் முதலாக இடம் பெறவுள்ள இந்த சர்வதேச திரைப்பட விழாவில் பல நாடுகளிலிருந்தும் இயக்கப்பட்ட பல வகையான திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன. இன்று ஆரம்பமாகும் இவ்விழா தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம்பெற்று செப்ரெம்பர் 7 ஆம் திகதியளவில் நிறைவடையும்.

தொடக்க நாள் விழாவில் ஜேர்மனிய பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கிறிஸ்தோபர்ஸ் ஹான்ஸ் ப்ரான்கோவின் Beauty and the Beast (La belle et la bête) பியூட்டி அன்ட் த பீஸ்ற் என்ற திரைப்படம் திரையிடப்படவுள்ளது. இறுதியாக பிரசன்ன ஜெயக்கொடியின் "28" என்ற திரைப்படத்துடன் முதல் நாள் அரங்கு றீகல் சினிமா அரங்கில் நிறைவடையும்.

கொழும்பில் இடம்பெறவுள்ள திரைப்பட விழா ஜப்பான் நாட்டு ஒகினாவா சர்வதேச திரைப்பட சங்கமும் இலங்கை திரைப்பட இயக்குனர்கள் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளதாகும். திரைப்படங்களுக்குரிய கலாசார விழுமியங்கள், திரைப்பட இயக்குனர்களின் எண்ணங்கள், விமர்சனங்கள் என அனைத்தும் இந்நிகழ்வில் பகிர்ந்து கொள்ளப்படவுள்ளது.

## தற்காலிகமாக மூடப்படும் யால சரணாலயம்

யால தேசிய விலங்குகள் சரணாலயம் இன்றுமுதல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக வனவிலங்குகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

வறட்சி காரணமாக ஆகஸ்ட் - செப்ரெம்பர் மாதங்களில் யால விலங்குகள் சரணாலயம் மூடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் உள்ளக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுவதோடு, விலங்குகள் வேறு பிரதேசங்களுக்குச் செல்வதை தடுப்பதற்காக மின்வேலிகளும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒக்ரோபர் முதலாம் திகதி மீண்டும் விலங்குகள் சரணாலயத்தை திறப்பதற்கு தீர்மானித்துள்ள போதிலும் வறட்சி நீடிக்கும் பட்சத்தில் சரணாலயம் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும் என, வனவிலங்குகள் திணைக்களம் அறிவித்துள்ளதாக அரசாங்க செய்தி இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தங்கம் கடத்தியவர் விமான நிலையத்தில் கைது

சட்டவிரோதமாக தங்கத்தை கடத்தி வந்த ஒருவர் மத்தல, ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் இருந்து 232 கிராம் தங்கம் கைப்பற்றப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் 60 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தவிர சந்தேக நபரிடம் இருந்து 60 கையடக்கத் தொலைபேசிகள் அதற்கு பயன்படுத்தப்படும் மின் கலங்களையும் தாம் கைப்பற்றியதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் வெலிகம பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் அவர் டுபாய் நாட்டில் இருந்து நேற்றுமுன்தினம் இலங்கை வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அபராதம் விதிப்பு

கரவெட்டி அல்வாய் பகுதியில் சட்டவிரோதமாக வீட்டு மின்னிணைப்பை பெற்ற நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தால் ஒரு இலட்சத்து 72505 ரூபாவும் மின்சாரசபைக்கும் 20ஆயிரம் ரூபா அபராதமாக செலுத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

குறித்த் நபர் மின்மாற்றியிலிருந்து தனது வீட்டுக்கு களவாக மின்இணைப்பை பெற்று வந்த நிலையில் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இந்நிலையில் இவரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி மேற்படி அபராதத்தை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# எதிர்ப்பை காட்டும் நோக்கில் வெளிநாடு செல்லவில்லை

## மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

வெறுப்பு காரணமாகவோ, எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காகவோ நான் நேற்று முன்தினம் அதிகாலை வெளிநாடு செல்லவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.சில மாதங்களுக்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த பயணமாகவே தாம் வெளிநாடு சென்றதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமது வெளிநாட்டு பயணத்திற்கான அனுமதியை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்திடம் இருந்து பெற்றுக் கொண்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்றுமுன்தினம் அதிகாலை அவசரமாக லண்டன் நோக்கி புறப்பட்டுச் சென்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியை சஜித் பிரேமதாசவுக்கு வழங்க கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தே மங்கள இவ்வாறு வெளிநாட்டுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக வெளியான செய்தி குறித்து கேட்ட போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள மங்கள, எதிர்வரும் 8 ஆம் திகதி நாடு திரும்ப உள்ளதாகவும் அதன் பின்னர் ஊவா மாகாண சபைத் தேர்தல் முடியும் வரை பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ள உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கான விஜயத்தை விரைவில் மேற்கொள்வார் மேனகா

(யாழ்ப்பாணம்)

இலங்கை நாடாளுமன்றத்தில் மிருக உயிர்ப்பலிக்கெதிரான சட்டத்தினை இயக்கும் பேரணியில் உரையாற்றுவதற்கு இந்திய பிரதமர் மோடி அரசின் அமைச்சர் மேனகா காந்தி விரைவில் இலங்கை வரவுள்ளதாக அறவழிப் போராட்டக்குழுவினர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளனர்.

யாழ்.கைதடி சந்தியில் மிருக பலியினை நிறுத்தக்கோரி நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அறவழி போராட்டக் குழுவினர் இவ்வாறு தெரிவித்தனர்.

இச்சட்டத்தினை இயன்ற வரை இலங்கை நாடாளுமன்றில் சட்டமாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் முகமாக மோடி அரசின் அமைச்சர் மேனகா காந்தியின் வருகை அமையவுள்ளதாகவும், எதிர்வரும் காலத்தில் மாபெரும் பேரணி ஒன்று நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் சட்டம் அமைப்பது தொடர்பில் மேனகா காந்தி உரையாற்றவுள்ளதாகவும் அற வழி போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

அத்துடன், மிருக பலியை நிறுத்தும் சட்டத்தினை இயற்றுமாறு வலியுறுத்தி, வடமாகாணத்தில் 32 பிரதேச சபை, 6 நகர சபை, ஒரு மாநகர சபை என்பன தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதுடன், வடமாகாண சபையிலும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் அறவழிப் போராட்டக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

கனடா மொன்றியல் மாநிலம் விக்ரோறியா றோட் வர்த்தகர்களின் உதவியில் வடமராட்சி கிழக்கு மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. மாணவர்களின் எதிர்காலத்தில் புலம்பெயர் மக்கள் காட்டும் அக்கறையின் வெளிப்பாடாக, வடமராட்சி கிழக்கு அமைப்பாளர் சூரியா தலைமையில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுரைகள் கூறி, அப்பியாசக் கொப்பிகளை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வுகளில் அப்பகுதியை சேர்ந்த முன்பள்ளி மற்றும் கிராம அமைப்புக்கள் கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (48)

# வருமான பரிசோதகர்களுக்கு இடமாற்றம் வழங்ககோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் வருமான பரிசோதகர்கள் தாங்கள் பதவிஉயர்வு பெற்றும். மீண்டும் அதே சபைகளில் கடமையாற்றுவது பொருத்தமற்ற நடைமுறை என்றும் தங்களுக்கு இடமாற்றம் வழங்கி உதவ வேண்டுமென்றும் உள்ளூராட்சி அமைச்சரை சம்பந்தப்பட்ட வருமான பரிசோதகர்கள் கடிதம் மூலம் கோரியுள்ளனர்.

வருமான பரிசோதகர்களாக பதவிஉயர்வு பெற்றும் இடமாற்றம் பெறமுடியாத நிலை எனும் தலைப்பில் உள்ளூராட்சி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த காலங்களில் வருமான மேற்பார்வையாளர்களாக கடமையாற்றி வந்தோம்.

பின்னர் வடமாகாண ஆளுநரின் முயற்சியினால் வருமான பரிசோதகர்களாக பதவியுயர்வு பெற்றோம்.

தற்போது பதவிஉயர்வு பெற்ற போதிலும் எமக்கு வேறு பொருத்தமான சபைகளில் இடமாற்றம் வழங்காதது பெருங்குறையாகும்.

எனவே மேற்படி விடயத்தை உடன்பரிசீலித்து உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (92)

# டெங்கு நோயை கட்டுப்படுத்த கிணறுகளில் மீன் குஞ்சுகள்

## வவுனியா சுகாதார திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டும் டெங்கு நுளம்புகளை அழிக்கும் முகமாகவும் வீட்டுக் கிணறு களில் டெங்கு நுளம்பை அழிக்கும் மீன் குஞ்சு களை விடும் நடவடிக்கைகளை வவுனியா சுகா தார திணைக்களம் முன்னெடுத்து வருகின் றது.

மேலும் எதிர்வரும் மாதங்களில் மழைவீழ்ச்சி பதியப்படுமாக இருந்தால் திடீரென டெங்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பல்வேறான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும் என்பதனைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வவுனியா நகர்ப்பகுதியில் கடந்த காலங்களில் டெங்கு நோய் பரவியிருந்த நிலையில் சுகாதார திணைக்களத்தின் முன்கூட்டிய நடவடிக்கைகளால் டெங்கு நோய்கட்டுப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விரைவில் வெளியாகும் திசைகாட்டி நூல்கள்

(யாழ்ப்பாணம்)

திசைகாட்டி கலை இலக்கிய மன்றத்தினால் சிறுகதைத்தொகுதி, ஒன்றும் கவிதைத் தொகுதி ஒன்றும் பதிப்புச் செய்யப்பட்டு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

தற்சமயம் சிறுகதைத் தொகுதி பதிப்புவேலைகள் முடிவுற்றிருப்பதுடன் கவிதைத் தொகுதி பதிப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதற்குத் தேவையான ஆக்கங்கள் பெறப்பட்டு வருகின்றன. என திசைகாட்டி நிறுவனத்தின் சர்வதேச இணைப்பாளர் எஸ்.சுபசீலன் தெரிவித்துள்ளார்.

நேற்று திசைகாட்டி நிறுவனத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார். (பா)

# ஊழலுக்கும் இலஞ்சத்துக்கும் இடம்கொடாது வாழ்ந்தவர் "தர்மர்"



ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் நீண்ட வரலாற்றில் உன்னதமான தலைவர்களை இழந்துவிட்டோம். இவர்களில் பலர் தமிழ் இளைஞர்களினால் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். "உன்னதமான இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்யும் மனிதன் மாந்தருக்குள் தெய்வமாகிறார்" என சொல்லப்படுகிறது. அந்த வகையில் தமிழ் பேசும் மக்களின் உன்னதமான இலட்சியத்திற்காக பல வருடங்கள் போராடி தனது உயிரைத் தியாகம் செய்த அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 29 ஆவது சிரார்த்த தினம் இன்றாகும்.

பண்டைக் காலத்தில் ஈழத்தில் பெரும் புகழுடன் விளங்கி தமிழ் அரசர்களின் இராசதானியாகத் திகழ்ந்த பெருமைக்குரிய கிராமம் - கந்தரோடை, இக்கிராமத்தில் தானதர்மம் செய்யும் வள்ளல் பரம்பரையில் ஏக வாரிசாக 05.02.1918 இல் பிறந்தார். அமரர் தர்மலிங்கம். இவரை உறவினர், நண்பர்கள் மற்றும் மக்கள் 'இலங்கையா' என செல்லமாக அழைப்பார்கள். இவர் எப்பொழுதும் தமிழ் கலாசாரத்திற்கு அமைவாக தூய அழகான வேஸ்டி, நஷனல் கழுத்தில் மவ்ளர், அணிவது வழக்கம் முகம் மலர்ந்த சிரிப்பு, பொலிவான தோற்றம் கள்ளம் கபடமில்லா வெள்ளை நெஞ்சம் கொண்ட இவர் இன்றும் பல்லாயிரக்கணக்கான மக்க ளின் இதயங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்.

இவர் இளைஞராக இருந்த காலத்தில் 1942 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்குவதில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டுள்ளார். அவர் ஈடுபட்ட முதலாவது பொதுப் பணி இதுவேயாகும். இளமைத் துடிப்பும் இலட்சியப் பற்றும் உடைய இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களை ஆக்கப் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றதன் விளைவே யாழ்ப்பாணம் மாணவர் பேரவை. அவ்வாண்டில் வங்களாதேசத்தில் வீசிய கடும் புயல் மழையினால் ஏற்பட்ட வெள்ளப் பேரழிவை ஈடு செய்யும் வகையில் யாழ்ப்பாணத்தில் வீடு வீடாச் சென்று உணவும் உடையும் பொருட்களும் சேகரித்து அனுப்புவதில் ஈடுட்டார். அதனைத் தொடர்ந்து உள்ளூ ராட்சி அரசியலில் தன்னை முழுமை யாக ஈடுபடுத்தி கந்தரோடை கிரா்மத்தின் உறுப்பினராக இருந்து உடுவில் கிராம சபையின் தலைவராக போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

இவர் சபைத் தலைவராக இருந்த போது ஊழலுக்கும் இலஞ்சத்துக்கும் எள்ளவும் இடம் கொடாது நேர்மையான நிர்வாகத்துக்கு இலக்கணமாக விளங்கிய படியினால் பலமுறை இச்சபையின் தலைவர் பதவி இவரைத் தேடிவந்தது. அப் பொழுது இச்சபையில் இவருக்கு வலக்கரமாக விளங்கிய அமரர் ச.முத்துலிங்கம் இவருக்குப் பின் தலைவரானார்.

சமூக சேவையில் அதிக நாட்டம் கொண்ட இவருக்கு மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கும், மதிப்பும் இருந்த படியினாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் அவருக்கிருந்த பற்றாலும் 1960 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட உடுவில் தொகுதியில் அவ்வருடம் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தந்தை செல்வ[illegible]வேட்பாளராக இவர் நிறுத்தப்பட்டு பல்லாயிரக் கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் பெருவெற்றியீட்டினார்.

நெருக்கடியான காலகட்டத்தில் கூட ஏனையவர்கள் இந்தியாவிலும் வேறு நாடுகளில் இருந்த போது தனது சொந்தக் கிராமத்தில் துணிந்து வாழ்ந்தவர் "தர்மர்"

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்" என திருவள்ளுவர் கூறியதற்கிணங்க தர்மரின் ஏக புத்திரன் தம்பி சித்தார்த்தன் தனது கல்வியியற் கல்லூரி அமைப்பதற்கு தந்தையின் நினைவாக இரு நூறு பரப்புக்காணியை இலவசமாக வழங்கியதை யாழ்.கல்விச்சமூகம் பாராட்டியுள்ளது கல்லூரியின் நிர்வாகம் தர்மருக்கு உருவச்சிலை அமைத்து அவர் நினைவாக ஒரு மண்டபத்திற்கு "தர்மலிங்கம் மண்டபம்" என பெயர் சூட்டி இருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

தான் சார்ந்திருந்த அரசியல் இயக்கத்திற்காகவும் அதன் தூய்மையான கோட்பாடுகளுக்காகவும் உளத்தூய்மையுடன் உழைத்த உத்தம தலைவர் தர்மர் இளைஞர்களின் தோழனாகவும் அவர்களின் முன்னேற்றத்திற்கு அயராது சீசருக்கு நிகராக "தர்மர்" நிற்கின்றார். இவரின் படுகொலையை கேள்வியுற்று காலம் சென்ற கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி.தங்கம்மா அப்பாக்குட்டி பின்வருமாறு கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

"தர்மரோ சாவைப் பரிசாகக் பெற்றார். நாங்களோ கண்ணில் நீரைப் பரிசாகவும் நெஞ்சில் நெருப்பைப் பரிசாகவும் பெற்றுவிட்டோம்."

ஆ.சி.கணேசவேல். ஜே.பி.
பிரதேச சபை உறுப்பினர்
மானிப்பாய்.

## சீர்திருத்த நிலையங்களில் 15 ஆயிரம் சிறுவர்கள் உள்ளனர்


400 சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் சிறுவர்கள் சிறுவர் சீர்திருத்த நிலையங்களில் இருப்பதாக அகில இலங்கை சிறுவர் சீர்திருத்த அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கே.கே.கீர்த்திரத்ன இதனைத் தெரிவித்தார்.

குறித்த சிறுவர்கள் அதிக குற்றச் செயல்களில் ஈடுப்பட்டமை தொடர்பிலேயே இவ்வாறு அவர்கள் சிறுவர் சீர்திருத்த நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் இவர்களை மீண்டும் சமுதாயத்துடன் இணைப்பதற்கு அவர்களுக்கு உளவியல் ரீதியான போதனைகள் அவசியப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.நா. விசாரணைக் குழுவிற்கு அனுமதியளிப்பது அவசியமற்றது

## அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலல தெரிவிப்பு



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் விசாரணைக் குழுவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதியளிக்க வேண்டிய அவசியமில்லை என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்ய இந்தப் பிரதிநிதிகள் குழுவிற்கு அனுமதிய ளிக்க வேண்டிய அவசியம் கிடையாது என அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஏனெனில், காணாமற போதல்கள தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடாத்தி வருவதாக. நேர்க்கத்திற்காக இரண்டு குழுக்கள் விசாரணை நடாத்த வேண்டிய அவசியம் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள அமைப்பின் கோரிக்கை குறித்து கவனம் செலுத்தப்படும் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் கோரிக்கை நியாயமானதாக இருந்தால் ஏற்றுக்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு வரும் நிலையில் மற்றுமொரு விசாரணை நடாத்த அவசியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வல்லப் பட்டையுடன் சீன பிரஜை கைது

13 கிலோ நிறையுடைய வல்லப்பட்டையை கடத்திச்செல்ல முற்பட்ட சீனப்பிரஜை ஒருவர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத் தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்லப்பட்டையை கடத்திச் செல்ல முற்பட்டபோது அவரை தாம் கைது செய்ததாக சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மலேஷியா வழியாக, சீனாவின் ஹாங்காய் நகருக்கு இவர் செல்லத் தயாராக இருந்தார் என்றும், அவர் வைத்திருந்தபை ஒன்றில் வல்லப் பட்டை மறைத்துவைத்திருந்தமை கட்டுபிடிக்கப்பட்டது என்றும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட வல்லப்பட்டைகளின் மதிப்பு பத்து மில்லியன் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# மோசடி செய்தே தேர்தலில் வென்றார் விளையாட்டுத் துறை அமைச்சர்

## குற்றம் சாட்டுகிறார் ஐ.தே.க. அமைப்பாளர்

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே மோசடி செய்தே தேர்தல்களில் வெற்றியீட்டினார் என அவரது சகோதரரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஆனந்த அளுத்கமகே குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாவலப்பிட்டி புதிய தொகுதி அமைப்பாளர் பதவியை பொறுப்பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அமைச்சர் அளுத்கமகே ஓர் நன்றி கெட்டவர். ஏறிய ஏணியை உதைத்து விட்டார்.

அமைச்சரின் வெற்றிக்காக இரத்த வியர்வை சிந்தி அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களை அவர் விரட்டிவிட்டார். கிரமமாக ஒவ்வொருவராக உதவி செய்தவர்களை அவர் உதறித் தள்ளிவிட்டார். இறுதியில் நிழலைப் போன்று இருந்த மனைவியையும் விரட்டிவிட்டார்.

அதிகார மோகம் மற்றும் தலைக்கனத்தினால் அமைச்சர் அளுத்கமகே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றார். நாவலப்பிட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியே வெற்றியீட்டி வந்தது. அமைச்சர் அளுத்கமகே தேர்தல் வன்முறைகள் மற்றும் மோசடிகளின் மூலமே ஆளும் கட்சியை வெற்றியடையச் செய்கின்றார்.

இதனை மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நான் தெரிவிக்கின்றேன். நாவலப்பிட்டி சார்க் கிராமத்தில் உரியவர்களுக்கு வீடுகள் வழங்கப்படவில்லை. அமைச்சருக்கு தேவையான வகையிலேயே பொலிஸார் செயற்படுகின்றனர் என ஆனந்த அளுத்கமகே கண்டியில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

## இலங்கையில் பொதுத் தேர்தல்களில் வன்முறை அதிகரிக்கும் அபாயம்

PAFFREL

ஊவா மாகாண தேர்தலில் தற்போது இடம்பெறும் தேர்தல் வன்முறைகளை அவதானிக்கும்போது ஜனாதபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களின் நிலைமை மிகவும் பயங்கரமானதாக இருக்கும் என்ற அச்சம் தோன்றுவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் தெரிவித்துள்ளது.

பொலிஸாரால் சட்ட மொழுங்கை பேண முடியாத நிலை ஊவாவில் காணப்படுவது குறித்து பொலிஸ் மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே பவ்ரல் இது குறித்து சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் ஒன்றில் நடைபெறுகின்ற தேர்தலில் வன்முறைகளை கட்டுப்படுத்துவதற்காக பெருமளவு பொலிஸாரை பயன்படுத்தலாம் எனினும் பொது மற்றும் ஜனாதிபதி தேர்தல்கள் ஒன்பது மாகாணங்களிலும் நடைபெறுகின்ற நிலையில் அந்தப் பகுதிகள் முழுவதிலும் பாரியளவில் பொலிஸாரை பயன்படுத்துவது சாத்தியமா என பவ்ரல் கேள்வி எழுப்பியுள்ளது.

# சிறுநீரக நோயாளர்கள் குறித்தும் அரசு கவனம் செலுத்த வேண்டும்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுநீரக நோயாளர்களின் பொருட்டு அரசாங்கம் எந்த விதமான வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளார்.

கலாவெள பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறுநீரக நோயாளர்களுக்காக அரசாங்கம் நீதி ஒதுக்க வேண்டிய முறை தொடர்பில் தம்மால் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க முடியும் எனவும் எதிர்க் கட்சி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுநீரக நோயாளர் எண்ணிக்கை தற்போது அதிகாரித்துள்ளது. இதற்குத் தீர்வு ஒன்று தேவைப்படுகின்றது. அதற்கு நான் யோசனை ஒன்றைக் கூறுகின்றேன்.



நாட்டில் தற்போது இரண்டு வானூர்தி சேவைகள் காணப்படுகின்றன. இதில் மிஹின் லங்கா மாத்திரம் ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபா நட்டம் அடைகின்றது. இந்த நிலையில் மஹின் லங்காவை நிறுத்தி விட்டு அதற்கு செலவு செய்யும் பணத்தை சிறுநீரக நோயாளர்களுக்கு செலவு செய்ய முடியும்.

மிஹின் என்ற பெயரை அழிக்கத் தேவையில்லை. அந்த பெயரை பாதுகாக்க தான் ஒரு யோசனை சொல்கிறோன். மிஹின் உதவி என்று வைத்துக்கொள்வோம். இது புண்ணியமான செயலாகும் என்று ரணில் குறிப்பிட்டார்.

# விடைபெற்றார் நவி பதவியேற்றார் ஹுசைன்



(கொழும்பு)

கடந்த ஆறு வருடங்களாக, ஐககிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் பதவியிலிருந்து நவநீதம்பிள்ளை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையுடன் ஓய்வு பெற்றார்.

இந்நிலையில், புதிய மனித உரிமைகள் ஆணையாளராக ஜோர்தான் நாட்டின் இளைவரசர் சையத் அல்ஹுஸைன், நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

ஓய்வு பெற்றுச் செல்லும் நவநீதம்பிள்ளை, இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விசாரணையை நடத்திவரும் ஐ.நா குழு, சிறப்பான முறையில் செயற்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் நவநீதம் பிள்ளை, சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் பிரதானியாக நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது.


2008ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளராக தனது பணிகளை ஆரம்பித்த நவநீதம்பிள்ளை, 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதி,-- மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்பட்டார்.

இரண்டாவது பதவியேற்புக் காலம் நேற்றுடன் பூர்த்தியான நிலையில், அவர் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில், கடந்த ஜூன் மாதம் 17ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால், ஜோர்தான் நாட்டின் இளைவரசர் சையத் அல் ஹுஸைன், ஐ.நா மனித உரிமைகள் புதிய ஆண்ணயாளராக தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோதமாக ஆஸி.செல்வோரின் எண்ணிக்கையில் 90 வீதம் வீழ்ச்சி

## ஆஸி.குடிவரவு அமைச்சர் தகவல்



(கொழும்பு)

சட்ட விரோதமாக படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு புகலிடம் கோருவதற்காக இந்தோனேஷியாவை அடைபவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை 90 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும், இந்தோனேஷியாவிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை முதற்தடவையாக 10,000 ஐ விட குறைந்துள்ளதாகவும் அவுஸ்ரேலியா செய்தி சேவை ஒன்றுக்கு அமைச்சர் மொரிசன் தெரிவித்துள்ளார்

அவர் தொடர்ந்து தெரிவித்தாவது, அவுஸ்ரேலியாவிற்கான வழிகள் அடைக்கப்பட்டுள்ளதை புகலிடக் கோரிக்கையாளர்கள் அறிந்திருக்கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

அந்தத் துறையில் இருந்து ஆட்கடத்தல்காரர்கள் விலகி வருகிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலமாக தான் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள தற்காலிக விசாவிற்கு ஆதரவு கிடைத்தமை பெரும் வெற்றி எனத் தெரிவித்துள்ளார் அவர்.

இனி வரும் காலங்களிலும் தான் அறிமுகப்படுத்திய Bve எனப்படும் தற்காலிக விசாவை மீண்டும் அறிமுகப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு செனட் சபையில் ஆதரவு கிடைக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

தொழிற்கட்சியையும் பசுமைக் கட்சியையும் சேர்ந்தவர்கள் தற்காலிக பாதுகாப்பு விசாவை அறிமுகப்படுத்துவதற்கான முயற்சிகளை தொடர்ந்தும் ஆட்சேபித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் தேர்தலில் மக்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளோம். அதில் அகதிகள் விடயம் மிகவும் முக்கியமானது.

தற்காலிக விசாவை அறிமுகப்படுத்துவதற்கு தேர்தலில் கிடைத்த ஆணையாக தாம் காணும் விடயத்தை அமுலாக்குவதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்துள்ளதென அவர் தெரிவித்தார்.

இவை அனைத்தையும் எமது மக்களுக்கு கொடுத்த ஆணைப்படியே செய்கின்றோம்.

ஆகவே எமது அகதிக் கொள்கை மிக சிறந்த கொள்கையாகவே இருக்கின்றது என தெரிவித்துள்ளார்.

# தமிழ் சிங்கள மொழிகள் கற்பிக்க யாழ்.பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு

## துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களில், தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும், சிங்கள மாணவர்களுக்கு தமிழ்மொழியும் கற்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

தமிழ்மொழி ஒரு மாதக் கற்கையில் சித்தியடைந்த இராணுவத்தினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு காங்கேசன் துறையில் அமைந்துள்ள தல் சேவன விருந்தினர் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், இன்னும் ஒரு சில மாதங்களில் இந்தக் கற்பித்தல் செயற்பாடுகள் யாழ்.பல் கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள 15 பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மாணவர்களுக்கு சிங்களமும் சிங்கள மாணவர்களுக்கு தமிழும் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேற்கொண்டு வருகின்றது.

ஒரு சில பல்கலைக்கழகங்கள் இதனை முன்னதாகவே அறிமுகம் செய்து கற்பித்து வருகின்றன.

அந்த வகையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் இதற்கான பாடவிதானத்தை தயாரிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## "வன்னி 14" புகைப்படக் கண்காட்சி தொடர்பாக கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களின ஆற்றல்களை மேமபடுத்தும் நோக்கோடு அவர்களின் சிறந்த புகைப்படங்களை காட்சிப்படுத்தும் 'வன்னி 14" எனும் புகைப்படக் கண்காட்சி எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கும் வவுனியா அரச அதிபருக்குமிடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களால் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வவுனியா மாவட்ட செயலகத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ளதுடன் சிறந்த புகைப்படத்துக்கான விருதுகளும் ஊடகவியலாளருக்கு வழங்கப்படவுள்ளதாக வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர தெரிவித்துள்ளார்.

## முரசின் இன்றைய பலன்

(02.09.2014 செவ்வாய்க்கிழமை)



ஜய வருஷம் ஆவணி மாதம் 17 ஆம் திகதி.
சித்தம் / அட்டமி.
அனுச நட்சத்திரம் பி.ப. 02.41 வரை. பின் கேட்டை.
இராகு காலம் 03.05 - 04.35 வரை. சுபநேரம் 10.35 - 12.05 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சொத்துப்பங்கீடு தொடர்பாக நிலவிய பிரச்சினை சுமுக நிலைக்குவரல், தேடிவந்த வேலை வாய்ப்பு கைவிட்டுப் போதல். |
| ரிஷபம் | கொடுக்கல் வாங்கல் பிரச்சினை சுமுகநிலைக்கு வரல், வியாபாரத்தில் இலாபம் கிட்டுதல். |
| மிதுனம் | தொடர்ந்து வருத்திக் கொண்டிருக்கும் மார்புச்சளி நோய் குறைவடைதல், குழந்தைப் பேறு கிட்டுதல். |
| கடகம் | குருவும் சுக்கிரனும் நற்பலன்களைத்தரும் நிலையில் இருப்பதினால் விவாகப்பேச்சு வார்த்தை நன்மை தரும், தாயாரின் தேக நலன் பாதிக்கப்படல். |
| சிம்மம் | விவாகம் ஒப்பேறாததால் பெற்றோர் மனம் வருந்தல், எதிரியின் அச்சுறுத்தல் நீங்கியமையினால் துணிவுடன் நடமாடும் நிலை ஏற்படல். |
| கன்னி | குருப்பெயர்ச்சி இலாப நிலையில் இருப்பதினால் புதிய முயற்சிகள் ஆரம்பிக்க ஏற்றதினமாகும், பிள்ளைகளுக்கு புத்திமதி கூற முற்பட்டவேளை மனக்கசப்பு ஏற்படல். |
| துலாம் | வெளியூர் பயணத்திற்காக செலுத்திய பணத்தைப் பெற சிரமப்படல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனி நடைபெறுவதினால் புதிய முயற்சிகளில் ஈடுபடத்தயக்கமேற்படல், நீண்ட காலத்திற்குப் பின்னர் பிள்ளைகளைக் கண்டு மனம் மகிழ்தல். |
| தனுசு | காணி உறுதியில் மோசடி தொடர்பில் நடவழக்கை எடுத்தல், கணக்கில் நம்பகத்தன்மை அற்றுப்போனதால் வாடிக்கையைக் கைவிட்டுவிடல். |
| மகரம் | விவாகப் பேச்சில் குழப்பம் ஏற்படல், காலாவதியான பொருளின் திகதியில் மாறுபாடு செய்து விற்கமுயன்றமையினால் தண்டனை அனுபவித்தல். |
| கும்பம் | உணவுக்கட்டுப்பாட்டினை மீறிச் செயற்பட்டதினால் நோயை எதிர்கொள்ளல், விபத்துக்கள் ஏற்படல். |
| மீனம் | பரீட்சை மற்றும் தகுதி தராதரத்தினால் உயர்பதவி கிடைக்கும் வாய்ப்பு உண்டாதல், அஷ்டமத்துச்சனி இருப்பதினால் புதிய முயற்சிகளை ஒத்தி வைத்தல். |

## எழுத்தறிவு தினவிழா

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய எழுத்தறிவு தினவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வின் போது எழுத்தறிவு தினப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவ மாணவியர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## பட்டபின்படிப்பு விரிவுரைகள்

(மல்லாவி)


யாழ்.பல்கலைக்கழக கல்வித் துறையினரால் நடாத்தப்படும் பட்டபின் படிப்பு டிப்ளோமா மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகுமென பல்கலைக்கழக பீடாதிபதியும் பேராசியருமான புஸ்பரத்தினம் தெரிவித்தார். (140)

## பாடசாலை மதில் நிர்மாணிப்பு

யா/வரணி மத்திய கல்லூரிக்கு 1410 அடி மதில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதில் 1000 அடி மதிலை வரணி ஒன்றியம் கன்டாவும், 350 அடி மதிலை வரணி ஒன்றியம் பிரித்தானியாவும், 60 அடி மதிலை ஏனைய சில பழைய மாணவர்களும் சேர்ந்து செய்து முடித்துள்ளதால் தற்போது கண்ணைக் கவரும் விதத்தில் பாடசாலை மதில் காட்சி அளிக்கிறது. (150)

## செல்வச்சந்நிதியானுக்கு இன்று ஒன்பதாம் திருவிழா



### தாழ்பணிவோம்

வெஞ்சமர் புரிந்தெம்மை
வாழவைப்பான் தாழ்பணிவோம்
சஞ்சலங்கள் நீக்கிடுவான்
சந்நிதியான் நம்பிடுவோம்
கொஞ்சுதமிழ்ப் பாட்டெடுத்து
குருமுருகைப் பாடிடுவோம்
விஞ்சுபுகழ் சேர்க்கஅந்த
வீரனையே தொழுதெழுவோம்.


ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம், மூளாய்.

### தலைவன் முருகனவன்!

அந்தகரும் ஆண்டியரும் கூடிடுவர் அங்கே
அமுதசுரபிசுரந்திடும் காண்பீர் களங்கே
சொந்தமிலாதுறவியரும் வந்திடுவர் சந்நிதிக்கே
வேலவனின் அருள் மாட்சி கண்டு வியந்திடுமே
தவித்தவர்க்கு தாழ்திறக்கும் சந்நிதானம் அது
தலைவன் முருகனவன் சந்நிதானம் பாடுங்களே
"சத்திநிபாதம்" தந்திடுவான் முருகன் தேடுங்கள்
தஞ்சமென கூடி ஆடிடுங்கள் அஞ்சவரும் பயமோடவே.

மண்டைதீவு மகிழ்நன்.

## தெல்லிப்பளை துர்க்கையம்மனை கவிதையால் துதிசெய்வோம்



### அருட்கடாட்சம் தருவாயே!

தெல்லிப்பளை உறையும் தேவியே! துர்க்கையே!!
தோத்தரித்தோம் தாயே! காத்தருள் புரிவாய்!!
நல்லிதயமுடனே நாம் நல்வாழ்வு வாழவே
நமக்கருள் புரிவாய் ஞானநாயகியே! தாயே!!
செல்வஞ் செழிக்கும் இலங்கை சீர்பெற்றிடவே
நல்லருள் புரிய ஏன் இந்தத் தாமதம்?
வல்ல கணபதியும் வடிவேலனும் அருகில் வர
அருட்காட்சி தருவாய் அம்மா சரணம்! சரணம்!!


சிவநெறி கலாநிதி இராசையா ஸ்ரீதரன்

(தெல்லிப்பளை துர்க்கையம்மனுக்கு இன்று ஏழாம் நாள் திருவிழா)

# குண்டு போர்டுதலில் போலந்து வீராங்கனை சாதனை

போலந்து நாட்டைச் சேர்ந்த வீராங்கனை குண்டு எறிதல் போட்டியின் பெண்கள் பிரிவில் புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

ஜேர்மனியின் பெர்லின் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப் போட்டியில் போலந்து வீராங்கனை அனிதா விலோடார்ஜைக் 79.58 மீற்றர்கள் தொலைவிற்கு குண்டு எறிந்து



புதிய சாதனை படைத்துள்ளார். இவர் கடந்த 2009ஆம் ஆண்டில் இதே மைதானத்தில் உலக சம்பியன் பட்டம் வென்றார். 29 வயது நிறைந்த அனிதா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கமும் மற்றும் 2 முறை ஐரோப்பிய சம்பியன் பட்டமும் வென்றுள்ளார்.

கடந்த மே, 2011ஆம் ஆண்டு ஜேர்மனி நாட்டின் பெட்டி ஹைட்லர் 79.42 மீற்றர்கள் குண்டு எறிந்து சாதனை படைத்திருந்தார். அதன்பின் 3 வருடங்கள் கழித்து போலந்து வீராங்கனை இந்தச் சாதனையை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சாதனை முறிடியத்தமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது என அனிதா வெற்றியின் பின் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அஸரென்கா சதம்

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முன்னாள் முதல்நிலை வீராங்கனை விக்டோரியா அஸரென்கா (பெலாரஸ்) 6-1, 6-1 என்ற நேர் செட்டில் எலினா வெஸ்னினாவை (ரஷ்யா) பந்தாடினார். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அஸரென்கா பதிவு செய்த 100ஆவது வெற்றி இதுவாகும்.

4ஆவது சுற்றில் அவர் சேர்பிய தகுதி நிலை வீராங்கனை அலெக்சாண்ட்ரா குருனிச்சை எதிர்கொள்கிறார். இவர் விம்பிள்டன் சம்பியன் செக்குடியரசின் பெட்ரா கிவிடோவாவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



## கிண்ணம் வென்றார் ஸ்பெயின் வீராங்கனை

டென்மார்க்கில் நடைபெற்ற உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில், ஸ்பெயின் வீராங்கனை கரோலினா மரின் சம்பியன் பட்டம் வென்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான இறுதிப் போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனை லி ஸுவருயியை (சீனா) எதிர் கொண்ட கரோலினா மரின் 17-21 என்ற கணக்கில் முதல் செட்டை இழந்து பின்தங்கினார். அடுத்த செட்டில் அதிரடியாக விளையாடிய அவர் 21-17 என வென்று பதிலடி கொடுக்க சமநிலை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, தங்கப் பதக்கம் யாருக்கு என்பதை தீர்மானிப்பதற்கான கடைசி செட் ஆட்டத்தில் அனல் பறந்தது.

மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டியில், கரோலினா 17-21, 21-17, 21-18 என்ற செட் கணக்கில் ஸுவருயியை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இதேவேளை, ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில், உலகின் முதல் நிலை வீரரான மலேசியாவின் சோங் வெய் லீ, சீனாவின் லாங் சென் மோதினர்.

அபாரமாக ஆடிய லாங் சென் 21-19, 21-19 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக உலக சம்பியன் பட்டத்தை தட்டிச் சென்றார். மூன்றாவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறிய சோங் வெய் லீ, மீண்டும் வெள்ளிப் பதக்கம் பெற்று ஆறுதல் அடைந்தார்.

# ரிம் பிரஸ்னனுக்கு வாய்ப்பு

இந்தியாவுக்கு எதிரான ஒரே ஒரு ருவென்ரி-20 போட்டியில் விளையாடும் இங்கிலாந்து அணியில் ரிம் பிரஸ்னன், ரவி போபரா இடம் பிடித்தனர்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி, ஒரே ஒரு சர்வதேச ருவென்ரி-2 போட்டியில் விள்ளயாடவுள்ளது. பர்மிங்கொமில், எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ள இப்போட்டிக்கான 14 பேர் கொண்ட இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

இதில் வேகப்பந்துவீச்சாளர் ரிம் பிரஸ்னன் தேர்வு செய்யப்பட்டார். இவர், கடந்த மார்ச் மாதம் சிட்டகொங் எதிரான உலக கோப்பை (ருவென்ரி-20) போட்டியில் விளையாடினார். சமீபத்தில் முடிந்த ஏ பிரிவு போட்டியில், யார்க்சயர் அணிக்காக . சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால், மீண்டும் தேசிய அணியில் வாய்ப்பு பெற்றார். இதே போல, இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்ட ரவி போபரா, ருவென்ரி-20 அணியில் இடம் பிடித்தார்.

கவுண்டி போட்டியில் சிறப்பாக செயற்பட்ட ஜேம்ஸ் ரெய்லர், சர்வதேச ருவென்ரி-20 போட்டிக்கு அறிமுகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர், இதுவரை தலா 2 டெஸ்ட், ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

இங்கிலாந்து அணி விபரம்: இயன் மோர்கன் (கப்டன்), அலெக்ஸ் ஹேல்ஸ், ஜோசன் ராய், ரவி போபரா, ஜோ ரூட், ஜோஸ் பட்லர் (விக்கெட் காப்பாளர்), ஜேம்ஸ் ரெய்லர், மொய்ன் அலி, கிறிஸ் வோக்ஸ், கிறிஸ் ஜோர்டான், ரிம் பிரஸ்னன், ஜேம்ஸ் டிரட்வெல், ஸ்ரீபன் பின், ஹாரி குர்னே.

# சிறந்த வீரர்களில் நானும் ஒருவன்

உலகின் 10 தலைசிறந்த கால்பந்தாட்ட வீரர்களில் நானும் ஒருவர் என ஆர்செனல் கால்பந்து அணியின் ஸ்டிரைக்கர் மெசூத் ஓஸில் தெரிவித்துள்ளார்.

ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடி வந்த மெசூத், கடந்த ஆண்டு ஆர்செனல் அணிக்கு தாவினார். ஆனால் கடந்த சீசனில் அவ்வப்போது மட்டுமே களமிறக்கப்பட்ட அவர் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இதனால் அவர் விமர்சனத்துக்குள்ளானார். அதற்குப் பதிலளித்துள்ள மெசூத் மேலும் கூறியதாவது:

வலது புறத்தில் விளையாடக்கூடிய என்னை இடதுபுறத்தில் விளையாட வைப்பதால் பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. நான் கோலடிப்பதோடு மட்டுமின்றி, கோல் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய நபர் என்பது அணியின் பயிற்சியாளர், சகவீரர்கள், இரசிகர்கள் என ஒவ்வொருவருக்கும் தெரியும்.

மட்ரிட் அணிக்காக நான் விளையாடியபோது வலது புறத்தில் விளையாடினேன். இடது காலால் பந்தை அடிக்கக்கூடிய நான் வலது புறத்தில் இருந்து விளையாடியதால் சிறப்பாக



ஆட முடிந்தது. நான் கோலடித்ததோடு மட்டுமல்லாமல், மற்றவர்கள் கோலடிக்கவும் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தேன். ஆனால் இடது கால் பழக்கம் கொண்ட நான், இடதுபுறத்தில் இருந்து கோலடிப்பது மிகக் கடின மானது. எனினும் ரசிகர்களின் கருத்துகள் எனக்கு மிக முக்கியமானவை. அவர்கள் என் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பை வைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது என்றார்.

## இன்று 4ஆவது ஒரு நாள்



(லண்டன்)

இந்தியா இங்கிலாந்து அணிகள் மோதும் 4ஆவது ஒருநாள் போட்டி இன்று பர்மிங்கொமில் நடைபெறவுள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் மழையால் இரத்துச் செய்யப்பட்டது. கொர்டிப்பில் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் 133 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் நொட்டிங்கொமில் நடைபெற்ற 3ஆவது போட்டியில் 6 விக்கெட் வித்தியாசத்திலும் இந்தியா வெற்றி பெற்றது.

டெஸ்ட் தொடரை வென்ற இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரை இழக்காமல் இருக்கும் வகையில் இன்றைய ஆட்டத்தில் வெற்றி பெற கடுமையாக போராடும். அதற்கு ஏற்ற வகையில் அந்த அணி வீரர்கள் தங்களது முழுத் திறமையை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வீரர்களின் வரிசையிலும் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

# 31 வருடங்களின் பின் ஆஸியைப் பந்தாடிய சிம்பாப்வே




(ஹராரே)

முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரின் லீக் ஆட்டத்தில், பலம் வாய்ந்த அவுஸ்ரேலிய அணியை 3 விக்கெட் வித்தியாசத்தில் போராடி வென்று அதிர்ச்சி அளித்தது சிம்பாப்வே.

சிம்பாப்வே, அவுஸ்ரேலியா, தென்னாபிரிக்கா மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. நான்காவது லீக் ஆட்டத்தில் அவுஸ்ரேலியா - சிம்பாப்வே அணிகள் நேற்று முன்தினம் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்ரேலிய அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. காயம் காரணமாக ஓய்வெடுத்து வந்த கப்டன் மைக்கல் கிளார்க் இந்தப் போட்டியில் களமிறங்கினார்.


சிம்பாப்வே வீரர்களின் துல்லியமான பந்துவீச்சு மற்றும் துடிப்பான களத்தடுப்பை சமாளிக்க முடியாமல், அவுஸ்ரேலிய துடுப்பாட்ட வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஓய்வறை திரும்பினர். பிஞ்ச் 11, ஹியூஸ் 10, பெய்லி 1, மைக்ஸ்வெல் 13, மார்ஷ் 15 ஓட்டங்களில் வெளியேற, அவுஸ்ரேலியா 28.5 ஓவரில் 97 ஓட்டங்களைப் பெற்றவேளை 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது. இந்த நிலையில், கப்டன் கிளார்க் - ஹடின் ஜோடி 6ஆவது விக்கெட்டுக்கு 50 ஓட்டங்கள் சேர்த்தது. பொறுப்புடன் நிதானமாக விளையாடி அரை சதம் அடித்த கிளார்க், 68 ஓட்டங்கள் எடுத்து (102 பந்து, 2 பவுண்டரி) காயம் காரணமாக வெளியேறினார் (ரிட்டயர்ட் ஹர்ட்). பென் கட்டிங் 26, ஹடின் 49 ஓட்டங்கள் பெற்றவேளை ஆட்டமிழக்க, மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் நடையைக் கட்டினர். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றது. லியன் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பந்துவீச்சில் உத்செயா, திரிபானோ, சீன் வில்லியம்ஸ் ஆகியோர் தலா 2, நுயும்பு, வாலர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட் வீழ்த்தினர்.

பதிலுக்கு 210 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி பொறுப்புடன் ஆடியது. மவோயோ 15, சிக்கந்தர் 22, மசகட்சா 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அதிரடி காட்டிய பிரெண்டன் ரெய்லர் 32 ஓட்டங்களைப் பெற்றவேளை (26 பந்து, 5 பவுண்டரி) லியன் சுழலில் பலியானார். வாலர் 11, வில்லியம்ஸ் 4, திரிபானோ 3 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, சிம்பாப்வே 38.2 ஓவரில் 156 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட் இழந்து திணறியது. ஆஸி. அணி வெற்றி பெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கப்டன் சிகும்புரா - உத்செயா ஜோடி உறுதியுடன் போராடியது. அபாரமாக விளையாடிய சிகும்புரா, அரை சதம் அடித்து அசத்தினார். இந்த ஜோடி 8ஆவது விக்கெட்டுக்கு 55 ஓட்டங்கள் சேர்த்து ஆஸி. அணிக்கு அதிர்ச்சி தோல்வியை பரிசளித்தது. சிம்பாப்வே அணி 48 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 211 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை வசப்படுத்த, அந்நாட்டு இரசிகர்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

1983 உலக கோப்பை தொடரில் ஆஸி. அணியை வீழ்த்தியிருந்த சிம்பாப்வே, 11,406 நாட்களுக்குப் பிறகும் மீண்டும் அந்த அணியை வீழ்த்தி சாதனை படைத்தது. சிகும்புரா 52 ஓட்டங்கள் (68 பந்து, 4 பவுண்டரி), உத்செயா 30 ஓட்டங்களுடன் (28 பந்து, 2 பவுண்டரி, 1 சிக்சர்) ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் நதன் லியன் 4, ஸ்டார்க் 2, மைக்ஸ்வெல் ஒரு விக்கெட் வீழ்த்தினர். சிகும்புரா ஆட்ட நாயகன் விருது பெற்றார். 4 ஆட்டங்களின் முடிவில் தென்னாபிரிக்கா 9, அவுஸ்ரேலியா 5, சிம்பாப்வே 4 புள்ளிகள் பெற்றுள்ளன.

## விளையாட்டு செய்திகள்





# கிண்ணம் வென்றது பலாலி விண்மீன்

(பருத்தித்துறை)

உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை பலாலி விண்மீன் அணி கைப்பற்றிக் கொண்டது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வியாழக்கிழமை செந்தமிழ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. அணிக்கு ஒன்பது பேர் கொண்ட இச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியும் வெற்றிலைக்கேணி சென். செபஸ்தியான் அணியும் மோதின.

இரு அணிகளுமே ஆரம்பம் முதலே ஆக்ரோஷமாக மோதிக் கொண்டன. ஆட்டத்தின் 5ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை விண்மீன் அணி கோலாக்கியது. இதன் பின்னர் இரு அணிகளும் கோலைப் பெற்றுக்கொள்ள கடும் பிரயத்தனம் செய்தன. இரு அணிகளுக்கும் கோல் அடிக்கும் வாய்ப்புகள் பல கிடைத்தபோதிலும் உரிய உதைப்புகள் இன்றி எல்லாமே வீணாக்கப்பட்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பலாலி விண்மீன் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக ஜோன் கெனடி, தொடர் ஆட்டநாயகனாக குகவரதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த நன்னடத்தை அணிக்கான விருது மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்திற்கு வழங்கப்பட்டது. (93,12)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரி சங்கத்தினால் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச உத்தியோகஸ்தர்களுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் மென்பந்து கிரிக்கெட், கால்பந்து, கரப்பந்தாட்டம், கயிறு இழுத்தல், வலைப்பந்து, பூப்பந்தாட்டம், சதுரங்கம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இப்போட்டியில் பங்கு கொள்ளவுள்ள மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், பணியாளர்கள் கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (85)

### வடக்கு-தெற்கு நட்புறவு கால்பந்தாட்டப் போட்டி

# மானிப்பாய் இந்து, மகாஜனக் கல்லூரி வெற்றி

(தெல்லிப்பளை)

வடக்கு - தெற்கு நட்புறவை மேம்படுத்தும் நோக்கில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நட்புறவுக் கால்பந்துப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி இரண்டு பிரிவுகளிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி இரண்டு பிரிவுகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

37 வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திற்கான கால்பந்து சுற்றுலாவை ஒழுங்கு செய்த கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி யாழ். மத்திய கல்லூரி, இளவாலை ஹென்றியரசர் கல்லூரி ஆகிய அணிகளுடன் கடந்த சனிக்கிழமையும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிகளுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் மோதின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க கல்லூரி அணி நான்கு பிரிவுகளில் மோதியது. 13, 15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவுகளில் மகாஜனக் கல்லூரி அணிக்கும், சேனநாயக்க கல்லூரி அணிக்குமிடையில் போட்டிகள் நடைபெற்றன.

13 வயதுப்பிரிவில் சேனநாயக்கா கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கிலும், 15 வயதுப் பிரிவில் மகாஜனாக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கிலும், 17 வயதுப்பிரிவு ஆட்டம் 1:1 என்ற சமநிலையிலும், 19 வயதுப்பிரிவில் மகாஜனாக் கல்லூரி அணி 5:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றிபெற்றன.

ஞாயிற்றுக்கிழமை மாலை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் மானிப்பாய் இந்து, சேனநாயக்க கல்லூரி அணிகள் இரு பிரிவுகளில் மோதிக் கொண்டன. 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கிலும், 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 4-0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றது.

இப்போட்டித் தொடர் வடக்கு தெற்குப் பாடசாலை அணிகளுக்கிடையில் நட்புறவு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நோக்கங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (93)

# விசாரணைகள் முன்னெடுப்பு

(அராலி)

அராலி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அராலி துனைவி சென். ஸ்டார் விளையாட்டுக் கழக அணி வீரர்கள், மத்தியஸ்தரைத் தாக்கியமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வலிகாமம் கால்பந்தாட்ட லீக் தெரிவித்தது. மேலும், மேற்படி தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு போட்டித் தடை விதிக்கப்படும் என வலிகாமம் லீக் தெரிவித்தது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, அராலி பாரதி விளையாட்டுக் கழக அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியை தனது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இதில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில், அராலி துனைவி சென் ஸ்டார் அணியும் சென். தோமஸ் அணியும் மோதின.

இதில் சென். தோமஸ் அணி வெற்றிபெற்றிருந்தது. இந்நிலையில் போட்டி முடிவடைந்ததும், அராலி துனைவி சென் ஸ்டார் அணி வீரர்கள் மத்தியஸ்த்தரைத் தாக்கியதுடன், அதனைத் தடுக்கச் சென்ற போட்டி ஏற்பாட்டாளர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்து, வட்டுக்கோட்டை பொலிஸார் மைதானத்திற்குள் நுழைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனைத் தொடர்ந்து போட்டி ஏற்பாட்டாளர்களால், வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வலிகாமம் லீக் தெரிவித்தது. (48)

# புதிய ஒப்பந்தம்


ஆர்ஜென்ரீன கால்பந்து வீரர் ஏன்ஜல் டீ மாரியா 5 வருட ஒப்பந்தத்தில் பிரித்தானிய பிரபல கால்பந்து கழகமான மென்செஸ்டர் யுனைடட் கழகத்தில் இணைந்துகொண்டார்.

கால்பந்து விளையாட்டில் திறமையான வின்கர் வீரராக திகழும் மாரியா நான்கு வருட காலம் (2010-2014) ஸ்பெயின் நாட்டின் பிரபல கழகமான ரியல் மட்ரிட் அணியில் விளையாடியிருந்தார். மென்செஸ்டர் யுனைடட் அணி மாரியாவை விலைக்கு வாங்கிய தொகை 59.7 மில்லியன் பவுன்கள் (13 பில்லியன் ரூபாய்) ஆகும்.

ஏன்ஜல் டீ மாரியா ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகையானது இதுவரை பிரித்தானிய விளையாட்டுக்கழகமொன்று ஒரு வீரருக்காக செலவிடும் அதிகூடிய பணத்தொகை என்ற சாதனையை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் 2011ஆம் ஆண்டு லிவர்பூல் கழகத்திலிருந்து செல்ஸி கழகத்துக்கு ஸ்பெயின் நாட்டு பிரபல வீரர் பேர்னாண்டோ ரொரெஸ் 50 மில்லியன் பவுன்கள் விலைக்கு வாங்கப்பட்டதே சாதனையாக இருந்தது.

அத்துடன் மாரியா, உலகில் அதிகூடிய விலைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட கால்பந்து வீரர்களில் 6ஆவது இடத்தைப் பிடித்துள்ளார்.



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்க்ள் உயர்தரப் பாடசாலையின் 15 வயதுப் பிரிவு அணியைக் காணலாம். தேசிய மட்டப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ள மேற்படி வீராங்கனைகள் தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதேவேளை, பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01)



## பிரச்சினையில் சிக்கினார் ராம் கோபால் வர்மா

சிவனின் செயல் அல் கொய்தாவைவிட மோசம் என்று கூறி பிரச்சினையில் சிக்கியுள்ளார் இயக்குநர் ராம் கோபால் வர்மா.

என்ன பிரச்சினை?

பிள்ளையார் எப்படி பிறந்தார் என்பது குறித்து பல கதைகள் உலவுகின்றன. அதில் பிரதானமானவை, பார்வதி தேவி குளிக்கச் செல்கையில் தனது அழுக்கை உருட்டி ஒரு பாலகனை செய்து காவலுக்கு நிறுத்தினார் என்பது. அந்த நேரம் பார்த்து சிவன் பார்வதியை பார்க்க வருகிறார். பார்வதியின் அழுக்கால் உயிர் பெற்றவர் என்பதால் பார்வதியின் கணவரான சிவனை கணபதிக்கு தெரியவில்லை. அம்மா குளிக்கிறார், இப்போதைக்கு பார்க்க முடியாது என்று சிவனை தடுக்கிறார்.

தனது மனைவியைப் பார்க்க ஒரு பாலகன் முடியாது என்றதும் கோபம் கொண்ட சிவன் அவனது தலையை வாளால் கொய்து விடுகிறார். விஷயம் தெரிந்த பார்வதி ருத்திரமடைய வானுலகப் போர் மூள்வதற்கான நிலைமை. பிறகு இருவரையும் சமாதானப் படுத்துகிறார்கள். கோபம் தணிந்த சிவன், வடக்கு நோக்கி செல்லுங்கள், முதலில் யார் எதிர்ப்படுகிறார்களோ அவர்களின் தலையை வெட்டி எடுத்து வந்து பாலகனின் வெட்டுண்ட கழுத்தில் பொருத்தினால் பாலகன் உயிர் பெறுவான் என்கிறார்.

வடக்கு நோக்கி செல்கிறவர்களுக்கு முதலில் எதிர்படுவது ஒரு யானை. அதன் தலையை கொய்து வந்து பாலகனின் கழுத்தில் பொருத்த, கணபதி உயிர் பெறுகிறார். கணபதிக்கு யானை தலை வந்ததற்கான காரணம் இதுதான் என்று புராணம் சொல்கிறது.


சரி, விஷயத்துக்கு வருவோம். இதே கதையைதான் வர்மாவும் கூறியிருக்கிறார். பார்வதி தேவி குளிக்கும் போது அவர் பாலகன் ஒருவனை காவலுக்கு வைத்துள்ளார். சிவன் அந்த பாலகனின் தலையை கொய்து பிறகு ஒரு யானை தலையை பொருத்தியுள்ளார். பாலகனின் தலையை வெட்டியது அல் கொய்தா தீவிரவாதியை விட மோசமானது என்றிருக்கிறார் வர்மா. உடனே அவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார் ஒரு வழக்கறிஞர்.

புராணங்களில் சொல்லப்படும் கதைகளை இன்றைய அறங்களோடு ஒப்பிட்டு விமர்சிப்பதும், பிறகு அதற்காக நீதிமன்றம் போவதெல்லாம் கொஞ்சம் ஓவர்தான்!

# வலையில் கிடைத்தவை...




## காலாவதியான கடவுள்கள், கல்லா கட்டும் பேய்கள்



வணிக சினிமாவின் முக்கிய வியாபார மூலதனங்களுள் ஒன்று பக்தியும் கடவுளும். மத நம்பிக்கையில் ஊறிய பார்வையாளர்களை கவரும் வகையில் கடவுள்களின் மகிமையை சொல்லும் திரைப்படங்கள் அனைத்து மொழிகளிலும் வெளியாவதுண்டு.

சினிமா சரித்திரத்தில் உலக அளவில் அதிகம் வசூல் செய்த படம் அவதார். ஆங்கிலம் அல்லாத மொழிகளில் உலக அளவில் அதிகம் வசூல் செய்த படம், The Passion of the Christ. மெல்கிப்ஸன் இயக்கிய அமெரிக்கத் தயாரிப்புதான் இதுவும். ஆனால் படத்தில் பேசப்பட்டது வழக்கொழிந்து போன அராமிக் மொழி. தெரியாத மொழியில் உருவான ஒரு படம் உலக அளவில் வசூலில் முதலிடத்தைப் பிடித்ததற்கு கிறிஸ்தவர்களின் மத நம்பிக்கையே காரணம்.

பைபிள் கதைகள் ஹொலிவுட்டில் தொடர்ச்சியாக படமாக்கப்படுகின்றன. இந்த வருடம் பழைய ஏற்பாட்டில் வரும், நோவாவின் கதை படமாக்கப்பட்டது. ரஸல் க்ரோவ் நோவாவாக நடித்திருந்தார். தொலைக்காட்சியில் தொடராக வந்த பைபிள் கதைகள், Son of God என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது. Heaven is for Real படமும் மத நம்பிக்கையை அடிப்படையாக வைத்து வெளியானது. மேலும் பல படங்கள் தயாரிப்பில் உள்ளன.

தமிழில் இந்து மத நம்பிக்கையை அடிப்படையாக வைத்து படங்கள் தொடர்ச்சியாக வெளிவந்தன. அம்மன், ஆடிவெள்ளி போன்ற படங்கள் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றன. அம்மனு கந்ததாக கருதப்படும் ஆடி மாதத்தில் ஒரு அம்மன் படமாவது வெளியாகும். டிசம்பர் மாதத்தில் ஐயப்பன் பக்தர்களுக்கென்றே ஐயப்பனின் புகழ் சொல்லும் படங்கள் வெளியாகும். கிறிஸ்தவ மத நம்பிகை கையை முன்னிறுத்தி அன்னை வேளாங்கண்ணி போன்ற பல திரைப்படங்கள் வெளிவந்துள்ளன.

படிப்படியாக இந்த பக்தி வியாபாரம் குறைந்து இன்று சுத்தமாக வழக்கொழிந்த நிலையை எட்டியுள்ளது. அதேநேரம் கடவுள்களின் இடத்தை ஆவிகளும் பேய்களும் பிடித்துள்ளன. யாமிருக்க பயமே படத்தின் வெற்றிக்குப் பிறகு பேய் படங்களின் எண்ணிக்கை கோடம்பாக்கத்தில் சட்டென்று உயர்ந்துள்ளது.

இந்த வருடம் யாமிருக்க பயமே, அகடம், இருக்கு ஆனா இல்லை ஆகிய படங்கள் பேய்களை மையப் படுத்தி வெளியாயின. முனி 3 கங்கா, நந்திவரம், ஆ உள்பட ஒரு டசின் ஆவி படங்கள் வெளியாக உள்ளன. இந்த எண்ணிக்கை 2015 இல் இரு மடங்காகும் என்கிறார்கள்.

ஹொலிவுட்டில் இன்றும் தொடர்ந்து நடக்கும் பக்தி வியாபாரம் தமிழில் தடைப்பட்டதன் மர்மம் என்ன? பக்திப் படங்களின் பெருவாரி ரசிகர்களான பெண்களை தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் வீட்டிலேயே சிறை வைத்திருப்பதுதான் பக்திப் படங்கள் இல்லாமல் போனதற்கான காரணமா?

## விளம்பரம் காட்டும் உலகம் வேறு வகையான உலகம்



தமிழ்ப் படங்களில், கதாநாயகிகள் "வயதுக்கு வருவதாக" அமைக்கப்படும் காட்சிகளைப் பார்க்கும்போது, இயக்கு நருக்கு உண்மையிலே இந்த விஷயம் தெரியாதா அல்லது ஒரு பெண்ணிடமாவது கேட்டு இந்த மாதிரி காட்சிகளை எடுக்க மாட்டார்களா என்றும் தோன்றும். திரைப்படத்தில் காட்டுவதைப் போல் நட்டநடு சாலையில் வயிற்றைப் பிடித்துக் கொண்டு கதாநாயகி கத்துவது, வலி வந்தவுடன் நாயகனின் முகம் அவள் நினைவுக்கு வருவது எல்லாம் உண்மையில் எங்கும் நடப்பதில்லை.

பெரும்பாலான பெண்கள், பருவ வயதை நெருங்கியவுடனே, வயதுக்கு வந்தவுடனே உடம்பில் என்ன மாற்றம் ஏற்படும் என்பதைத் தெரிந்துகொள்வார்கள். அம்மா, அக்கா, அத்தை, பாட்டி, தோழிகள் என்று யார்மூலமாவது அந்த விஷயம் அவர்களுக்கு அறிமுகமாகியிருக்கும்.

நிகழ்வு நடந்தவுடன் பயம், வலி, பதற்றம், அவமானம் எல்லாம் கலந்த உணர்வுகள் ஒன்றுக்கொன்று மோதிக் கொண்டு வரும். இதைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்துவைத்திருப்பவர்கள் எப்படியாவது சமாளித்துவிடுவார்கள். ஒன்றும் தெரியாதவர்களுக்கு ஏற்படும் உணர்வு விவரிக்க முடியாதது.

என் பள்ளித் தோழி ஒருத்தி, தான் பூப்படைந்த போது, தனக்கு ரத்தப் புற்றுநோய் வந்துவிட்டது என்று நினைத்துக்கொண்டாள். அழுது ஆர்ப்பாட்டம் செய்ததில், அவரது உறவினர்கள் தலைசுற்றிக் கீழே விழாத குறைதான். பின்னர் தான், நடந்தது என்ன என்பதை உணர்ந்து ஆசுவாசப்பட்டனர்.

இது ஒரு பக்கம் இருக்க, "சானிட்டரி நாப்கின்" விளம்பரங்களைப் பார்த்தாலே டி.வியை உடைத்தால் என்ன என்றுதான் தோன்றும். (பெரும்பாலான விளம்பரங்கள் இந்த உணர்வைத்தான் ஏற்படுத்துகின்றன).

மாதவிடாய் நாட்களில், "நீங்கள் ஆசைப்படுவது போல் ஆடலாம், ஓடலாம்" என்று சொல்லி ஏணியில் ஏறுவதுபோல், எதன் மீதாவது ஏறிக் குதித்து ஓடுவதுபோல் காட்டுகின்றனர். உண்மையில் மாதவிடாய் நாட்களில் "ஓய்வு" தவிர வேறு எதுவும் தோன்றாது.

வயிற்று வலி, இடுப்பு வலி, ஒரு சிலருக்கு மார்பகம் வீங்கிப்போவது என்று பல வலிகளை அந்த மூன்று நாட்களில் பெண்கள் சந்திக்கின்றனர். இன்னும் சிலருக்குச் சோர்வு முகத்திலேயே எழுதி ஒட்டியிருக்கும். தவிர, மனரீதியாக ஏற்படும் பிரச்சினைகள் ஏராளம். இவற்றையெல்லாம் முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டு, மாதவிடாய் என்றால் ரத்தப்போக்கு மட்டும்தான் என்பதுபோல் காட்டுவது சலிப்பாக இருக்கிறது. எந்தப் பதற்றமும் இல்லாமல், ஓய்வு எடுப்பதைத்தான் நாங்கள் விரும்புகிறோம் என்பதுகூடவா விளம்பரத் தயாரிப்பாளர்களுக்குத் தெரியவில்லை?

மற்ற விளம்பரங்களைப் போல் இந்த விளம்பரங்களும் ஒன்றைத்தான் உணர்த்துகின்றன: விளம்பரத்தில் வரும் பெண்கள், விளம்பரத்தில் மட்டும் தான் இருக்கின்றனர்.

– ஆர்த்தி வேந்தன்

# வெளிநாட்டிலிருந்து வந்தவர்கள்!



1498ஆம் ஆண்டு வாஸ்கோடகாமா இந்தியாவுக்கு வருவதற்கு முன் இந்தியாவில் முக்கிய பொருட்களாக அரிசி, பருத்தி, கரும்பு, கோதுமை, சோளம், கம்பு மற்றும் பருப்புவகைகள் பயிரிடப்பட்டு வந்தன.

உருளைக்கிழங்கு, தக்காளி, நிலக்கடலை, கொய்யா, பப்பாசி, பூசணிக்காய், அப்பிள் போன்ற எதுவுமே இந்தியாவிலோ இலங்கையிலோ விளைவிக்கப் படவில்லை. அதுமட்டுமல்ல; புகையிலை, அன்னாசி, வள்ளிக்கிழங்கு, மிளகாய், கசகசா, முந்திரி போன்றவை கூட இங்கு கிடையாது, கோதுமை, கரும்பு விளைவிக்கப்பட்டாலும் சீனியைத் தயாரிக்கும் தொழில்நுட்பம் அறியவில்லை.

வாஸ்கோடகாமா வருகைக்குப் பிறகு உலகின் பல்வேறு உணவு, பழ வகைகள் இந்தியாவின் மேற்குப்பகுதியில் பயிரிட முயற்சி செய்யப்பட்டன. சில தாவரங்கள் இந்திய மண்ணிற்கு ஒத்து வரவில்லை. சில தாவரங்கள் செழிப்புடன் வேரூன்றத் தொடங்கி இந்தியாவின் பல பாகங்களில் விளைச்சலை தரத் தொடங்கின.

பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் பயிரிடப்பட்ட தாவரங்களில் தோடை, அப்பிள், அன்னாசி, மிளகாய், கொய்யா, புகையிலை, பப்பாசி போன்றவை இடம்பெற்றன. போர்த்துக்கீசர்கள்தான் இந்தியாவில் ஒட்டு மாம்பழ வகைகளை அறிமுகப்படுத்தினர். அதே போன்று இந்திய தாவரங்களும் தென்கிழக்கு ஆசியா, மலேசியா, இந்தோனேசியா, வடக்கு பர்மா, வடமத்திய சீனா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் பயிரிடப்பட்டன.

இங்கிருந்து அனுப்பப்பட்ட மிளகுக்குப் பதிலாக மிளகாய் இங்கு வந்திறங்கியது. தங்களிடம் வேலை பார்க்கும் அடிமைகள் உடல் பலத்துடன் இருந்த காரணத்தை ஆராய்ந்த போதுதான் பெர்ஷியர்களுக்கு வெங்காயத்தின் மதிப்பு தெரிந்தது. அதன் பிறகே வெங்காயம் உலகப் பிரசித்தி பெற்றது. தேயிலை ஆபிரிக்கா, சீனாவிலிருந்து அறிமுகமானதாகும்.

பின்னர் அந்தந்த நாட்டின் மண்வளத்தைக் கண்டறிந்து பிற நாடுகளில் தாவரங்களைப் பயிரிட Worldwide Fund for Nature திட்டம் அமைக்கப்பட்டு தாவர பரிமாற்றங்கள் நடந்தன. இதன் மூலம் சில தேவையற்ற தாவரங்களும் நம் மண்ணில் நுழைந்ததை தடுக்கமுடியவில்லை., யூகலிப்டஸ், கசூரினா போன்றவை காகிதம், ரேயான் தயாரிக்க முக்கிய பொருளாக கருதப்பட்டதால் அவுஸ்திரேலியாவிலிருந்து அறிமுகமாயின.



இதனால் நம் மண்வளம் பாதிக்கப்பட்டது. இதனுடைய வேர்கள் பூமிக்குள் தண்ணீர் எங்கிருந்தாலும் உறிஞ்சும் தன்மை உடையவை என்பதால் நிலத்தடி நீர் பற்றாக் குறையும் அதிகரித்துள்ளது. இவற்றின் இலையுதிர் காலத்தில் மனிதர்களின் உடல்நிலை பாதிக்கப்படுவதும் உண்டு

# போதும், இனியாவது சரியான பாதைக்கு நகருங்கள்!

– ஜே.யோகராஜ் கட்டுரையிலிருந்து.



முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஒரு குறிப்பிட்ட நிதியமைப்புக்கு தன்னிச்சையாக நிதி சேகரிப்பதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன, அது அரசியலமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு முரணானது. தற்போதைய மாகாண நிருவாகம், இலங்கை அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதியில் 20 விகிதத்தைக்கூட பயன்படுத்தவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

**அது பற்றிய விபரம் கீழே:**

மாகாணத்தில் பெரியளவு நிதி உள்ளபோது, மேலதிக நிதியை தேடுவதற்கான காரணம் என்ன. இதற்கான காரணம் சிவிக்கு மட்டுமே தெரியும். மறுபக்கத்தில் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட பணத்தையே உங்களால் பயன்படுத்த முடியாமல் உள்ளபோது, நீங்கள் தேடும் மேலதிக நிதியை நீங்கள் எப்படி பயன்படுத்தப் போகிறீர்கள்?

நிதிப் பரிமாற்றங்கள் மற்றும் வணிக தொடர்புகள் என்று வரும்பொழுது, 1987ஆம் ஆண்டின் மாகாணசபைச் சட்டம், 42, அதற்கான விதிகள் தெளிவாக விளக்குகின்றன.

கீழ்வரும் பிரிவுகள் இந்த விடயத்தில் ஒரு ஆளுநருக்கு உள்ள அதிகாரத்தைக் காண்பிக்கிறது.

சில நிதிகள் உருவாக்கப்பட வேண்டுமாயின், அத்தகைய நிதியை உருவாக்குவதற்கு முன்பு மாகாணத்தின் ஆளுநருடன் ஆலோசனை நடத்த வேண்டும். அத்தகைய தொடர்புகளை ஆளுநர் அனுமதிக்க வேண்டும். இந்த வட்டத்தை விட்டு வெளியில் செல்லும் எதுவும் பின்னர் வரும் நாட்களில் கடுமையான பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டி நேரும்.

மேலும், எந்த ஒரு மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கத்தின் ஆதரவு இல்லாமல் தனது சொந்த விருப்பத்துக்கு இயங்க முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு சேவை செய்வதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து உங்களுக்கு புரிந்துணர்வுடன் கூடிய நல்ல பரஸ்பர இணக்கம் அவசியம். மேலும் சில அமைப்புகள் சட்டத்தை மீறிச் செல்ல முயலுமானால் அது சட்டவிரோதமாகும்.

வட மாகாணத்துக்குப் பொறுப்பான மாகாண அரசிடம் நாங்கள் பணிவுடன் வேண்டிக் கொள்வது, “இது போதும். குறைந்த பட்சம் சரியான பாதையில் நகர்வதைப் பற்றி நாங்கள் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.”

இப்போதுள்ள அமைதியான சூழ்நிலை மாகாணத்துக்கு கிடைத்துள்ள ஒரு பரிசு. சமூகங்களிடையே ஆழமான புரிந்துணர்வு உள்ளது. ஆனால் சில அரசியல்வாதிகள் கதையின் உண்மையினை மாற்ற முயற்சிக்கிறார்கள்.

கள யதார்த்தத்தை நாங்கள் அனைவரும் புரிந்து கொண்டுள்ளோம். சாதகமான ஒரு சமாதானம் இங்கே உள்ளது. பயங்கரவாத சகாப்தத்தை நோக்கி திரும்பவும் தள்ளிவிட சில சக்திகள் சூழ்ச்சியான முயற்சிகளில் இறங்கியுள்ளன. மக்கள் இதற்கு இடமளிக்கக் கூடாது.

சிறிய எச்சமாக உள்ள தமிழ் புலம் பெயர்ந்தவர்கள், சில எதிர்க்கட்சி அங்கத்தவர்களுடன் சேர்ந்து நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கிறார்கள். நாங்கள் ஒரே தேசத்தவர்கள், தரப்பட்ட மாகாண நிருவாகத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் எங்கள் ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தை வெளிக்காட்டி, போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ வேண்டும்.

வெகுஜனத்துக்காக வேலை செய்வதற்கு நாங்கள் சாக்குப் போக்குகள் தேட முயற்சித்தால், அது இறுதியில் ரி.என்.ஏ அரசியல்வாதிகள் தங்கள் வாக்கு வங்கியை இழப்பதிலேயே முடிவடையும்.

இலங்கை அரசாங்கம் இந்த நாட்களில் அரசியல் வளர்ச்சியடைவது தொடர்ந்து கொண்டிருக்கிறது, அது தமிழ் மக்களின் பல பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என நான் நம்புகிறேன். மறுபக்கத்தில் ரி.என்.ஏ உரிமைகள் அரசியலை முன் தள்ளுகின்றன. அவர்கள் அதை தொடர்வார்களானால், பின்னர் 2010 ஜனாதிபதி தேர்தலில் ஏன் அவர்கள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களைக் கேட்டுக் கொண்டார்கள்?

ரி.என்.ஏ யுத்தக் குற்றம் பற்றிப் பேசுகிறது. அப்படியானால் இறுதிக்கட்டப் போரில் கடுமையாகப் போரிட்ட ஒரு மூத்த இராணுவ அதிகாரியான சரத் பொன்சேகா, ஒரு வருடத்துக்குள் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அதே மக்களின் முன்னால் ஒரு புனிதராக எப்படி மாறினார்?

ரி.என்.ஏயின் மூத்த பாராளுமன்ற அங்கத்தவர்களே உங்களைத்தான், தயவுசெய்து மேலே உள்ள கேள்விகளுக்கு பதிலளிக்க தயாராகுங்கள் அல்லது அடுத்த தேர்தலில் தமிழ் மக்களின் உள்ளக் கொதிப்புக்கு முகங்கொடுக்கத் தயாராகுங்கள்.

# பெருவெடிப்பும் பிரபஞ்ச நுண்ணலை பின்புல கதிர்வீச்சும்


இருபதாம் நூற்றாண்டில் பிரபஞ்சவியல் துறையில் இரு அதி முக்கியமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. ஒன்று நம் பிரபஞ்சம் விரிவடைகிறது என்ற கண்டுபிடிப்பு. இரண்டாவது பிரபஞ்ச நுண்ணலை பின்புல கதிர்வீச்சு (Cosmic Microwave Background Radiation).

இவை இரண்டும் ஆதாரங்கள் வறண்ட, ஊகங்கள் அடிப்படையில் மட்டுமே நின்ற பிரபஞ்சவியலை தெளிவான அடி எடுத்து வைக்க உதவின. இவை பெருவெடிப்புக் கொள்கையின் நேரடியான உறுதியான ஆதாரங்கள்.

பிரபஞ்சத்தின் தொடக்கம், பரிணாமம், ஆக்கக்கூறுகள், கட்டமைப்பு போன்றவற்றை ஆராயும் துறை பிரபஞ்சவியல் ஆகும். சூரியன் பூமிக்கு அருகில் இருக்கும் பிரம்மாண்டமான ஒளிமூலங்களில் ஒன்று. பிரபஞ்சத்தில் உள்ள சூரியன் போன்ற அனைத்து ஒளிமூலங்களையும் அவை உமிழும் மின் காந்த அலைகளையும் ஒருகணம் நீக்கிவிடுவோம். இப்போது ஒரு சிறப்புவகை தொலைநோக்கியைக் கொண்டு வெளியின் எந்தத் திசையில் பார்த்தாலும் வெளி முழுவதும் சீராக மென்மையாக ஒளிர்கிறது.

இந்தப் பிரகாசம் நாம் காணும் அல்லது பிரபஞ்சத்தில் தற்போது உள்ள எந்த ஒளிமுலத்திலிருந்தும் வெளிப்படவில்லை. இதன் அலைநீளம் கண்ணுறு ஒளியின் அலைநீளத்தை விட அதிகம் என்பதால் நம் கண்களால் காண இயலாது.

பிரபஞ்சம் முழுவதும் சீராக ஒளிரும் இந்த பின்புல கதிர்வீச்சின் மூலந்தான் என்ன? இது எப்படி பிரபஞ்சம் முழுவதும் இவ்வளவு சீராக பரவி உள்ளது?



**பின்புல கதிர்வீச்சு – எளிய விளக்கம்**

நம் பிரபஞ்சத்தின் குழந்தைப் பருவத்தில் நட்சத்திரங்களும் கோள்களும் உருவாகவில்லை. அது மிகுந்த அடர்த்தியும் வெப்பமும் கொண்ட தீப்பந்தாக (பிளாஸ்மா நிலையில்) இருந்தது. பிரபஞ்சம் விரிவடைய தொடங்கியதும் குளிர ஆரம்பித்தது.

ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் அணுக்கரு துகள்களும் எலக்ட்ரோன்களும் இணைந்து அணுக்கள் உருவாகின. அதன் பிறகு இந்தப் பிரபஞ்சம் ஒளி ஊடுருவிச் செல்லும் வெளியாக ஆனது.

அதற்கு முன் ஒளி மீண்டும் மீண்டும் (பருப்பொருள்) துகள்களினால் சிதறடிக்கப்பட்டது. அவை துகள்களுடன் பிணைக்கப் பட்டிருந்தது போன்ற ஒரு நிலை. பெருவெடிப்பில் இருந்து 380000 வருடங்கள் வரை பிரபஞ்சம் இந்த நிலையில் இருந்தது.

எந்தப் புள்ளிகளிலிருந்து ஒளி வெளியை சுதந்திரமாக ஊடுருவ ஆரம்பித்ததோ, அந்தப் புள்ளிகளை இறுதி ஒளிச்சிதறல் பரப்பு என்று கூறலாம். இந்தப் பரப்பிலிருந்து வெளியை ஊடுருவ ஆரம்பித்த ஆதி ஒளித்துகள்கள்தான் இன்று வெளியெங்கும் பரவியுள்ளன.


பிரபஞ்ச நுண்ணலை கதிர்வீச்சை ஒரு முழுக்கரும்பொருள் (Black-body) கதிர்வீச்சின் நிறமாலையுடன் ஒப்பிடலாம். அது தன் மீது விழுகின்ற மின்காந்த கதிர்வீச்சு அனைத்தையும் உட்கவர்கிறது. வெப்பச் சமநிலையில் உள்ள கரும்பொருள் அந்த வெப்பநிலைக்கு உரித்தான மின்காந்த கதிர்வீச்சை உமிழ்கிறது.

பூமியின் மேற்பரப்பில் கருவிகளை அமைத்து பின்புல கதிர்வீச்சை அளவிடுவது கடினம். ஏனென்றல் வளிமண்டலமும் பிற தேவையற்ற கதிர்வீச்சும் அளவீட்டில் இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும். துல்லியத்தைக் குறைக்கும். கருவிகளை விண்வெளியில் ஏவி இன்னும் துல்லியமாக அளக்கலாம்.

பின்புல கதிர்வீச்சை ஆராய மூன்று முக்கியமான செயற்கைகோள்கள் ஏவப்பட்டன. இவை கதிர் வீச்சை வானத்தின் அனைத்து திசைகளிலும் ஆராய்கின்றன. எடுக்கப்படும் அளவீடுகள் கணினி மூலம் பிரபஞ்சத்தின் நுண்ணலை நிழற்படங்களாக வரையப்படுகின்றன..

**1.** 1989இல் நாசா COBE (Cosmic Background Explorer) செயற்கைகோளை ஏவியது. நுண்ணலை மற்றும் அகச்சிவப்பு கதிர் அலைநீளங்களில் (1 மைக்ரோமீற்றரிலிருந்து 1 சென்டிமீற்றர் வரை) வானத்தின் அனைத்து திசைகளில் இருந்தும் வரும் கதிர்வீச்சின் நிறமாலையையும், சீரற்ற தன்மையையும் அளப்பது இதன் குறிக்கோள்.

உண்மையில் வெப்பநிலை சீரான, ஒரே அளவில் இல்லை. இடத்திற்கு இடம் மிக மிகச் சிறிய அளவில் (100000இல் ஒரு பகுதி). மாறுபடுகிறது. இதன் முடிவுகள் பெரு வெடிப்புக் கொள்கையை உறுதிசெய்தன. மேலும் பெருவெடிப்பு




கொள்கையில் உள்ள சில பிழையான கருத்தாக்கங்களை களைந்தது.

**2.** நாசா COBE ஐ தொடர்ந்து WMAP (Wilkinson Microwave Anisotrophy Probe) செயற்கைகோளை 2001இல் அனுப்பியது. இதுவும் நுண்ணலை கதிர்வீச்சின் வெப்பநிலை வேறுபாடுகளை மேலும் துல்லியமாக அளவிட்டது.

இந்த அளவீடுகள் பிரபஞ்சத்தின் தொடக்கம், ஆக்கக்கூறுகள், வயது, வடிவம் போன்றவற்றை தீர்மானிக்க உதவின. உதாரணமாக, இது பிரபஞ்சத்தின் வயது 13.77 (0.5% பிழை) பில்லியன் வருடங்கள் என்று கணக்கிட்டது.

• அதாவது பெருவெடிப்பு நிகழ்ந்து தற்போது வரை 13.77 பில்லியன் வருடங்கள் ஆகிவிட்டன. நமது பிரபஞ்சம் யூக்ளிடிய வடிவவியல் விதிகளுடன் ஒத்துப்போகிறது என்றும் நிறுவியது. மேலும் பருப்பொருள், எதிர்பருப்பொருள், அறியப்படாத பருப்பொருள், அறியப்படாத ஆற்றல் போன்றவற்றின் அளவை அறிய உதவியது.

**3.** WMAP ஐ தொடர்ந்து பிளாங்க் (Planck) செயற்கைகோள் ஐரோப்பிய விண்வெளி கழகத்தால் 2009இல் அனுப்பப்பட்டுள்ளது. இது ஆகச் சாத்தியமான துல்லியமான அளவீடு கருவிகளைக் கொண்டு பின்புல கதிர்வீச்சை ஆராய்கிறது.

இதன் தரவுகள் பிரபஞ்சத்தின் மொத்த அணுக்களின் எண்ணிக்கை, அறியப்படாத ஆற்றலின் தன்மை போன்றவற்றைப் பற்றி மேலும் அறிய உதவும். பிரபஞ்சத்தின் ஆரம்ப நிலையில் உள்ள சீரற்ற அடர்த்தி எப்படி பிரம்மாண்டமான விண்மீன் திரள்களையும், விண்மீன்திரள் கொத்துகளையும் வெற்றிடத்தையும் உருவாக்கின என்பதை தீர்மானிக்க பயன்படும். பிரபஞ்ச கட்டமைப்பு, பரிமாணம் தொடர்பான கோட்பாடுகள் சோதனைக்குட்பட்டு நிரூபிக்கப்படும்.

உண்மையில் பிரபஞ்ச நுண்ணலை பின்புல கதிர்வீச்சை நாம் நன்கு அறிவோம். நம் தொலைகாட்சிப் பெட்டியை ஒளிபரப்பப்படாத அலைவரிசையில் வைத்தால் நாம் காணும் நடனமிடும் வெண்கரும்புள்ளிகள் (Static) பெருவெடிப்பின் எச்சம்தான்.

இனி தொலைகாட்சியில் ஒன்றும் தெரியவில்லை என்று கவலை கொள்ள வேண்டாம். நாம் பிரபஞ்சத்தின் பிறப்பின் பொலிவைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நினைவில் கொள்வோம்.




## விடுகதைகள்

1. சுற்றும்போது மட்டும் சுகம் தருவாள். அவள் யார்?
2. செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே. அது என்ன?
3. கல்லுக்கும் முள்ளுக்கும் அஞ்சாதவன், பள்ளநீரைக் கண்டு பதைபதைக்கிறான். அவன் யார்?
4. கலர்ப்பூ கொண்டைக்காரி, காலையில் எழுப்பிவிடுவாள். அவள் யார்?
5. கந்தல் துணி கட்டியவன், முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அவள் யார்?
6. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?
7. கறுப்புக் காகம் ஓடிப்போச்சு, வெள்ளைக் காகம் நிற்குது. அது என்ன?
8. காலாறும் கப்பற்கால் கண்ணிரண்டும் கீரை விதை. அது என்ன?
9. மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன?
10. உருவத்தில் சிறியவன். உழைப்பில் பெரியவன். அவன் யார்?

ஒரு சிறு கதையை உங்களுக்குக் கூறுகின்றேன். ஒரு எஜமான் குதிரை மேல் போனான். ஆள் ஒருவன் பாதுகாப்புக்குப் பின்னே போனான். குதிரைமீது உள்ள மூட்டை ஒன்று விழுந்துவிட்டது அது எஜமானனுக்குத் தெரியாது. ஆனால் வேலையாள் பார்த்தும் எடுக்காமல் வந்துவிட்டான்.


எஜமான் கேட்டான் எங்கே மூட்டை என்று, எஜமான் மூட்டை அங்கேயே விழுந்துவிட்டதே என்றான். அட மடையா ஏண்டா விட்டுவிட்டு வந்தாய்? ஏன் எடுத்து வரவில்லை? என்றான் எஜமான். நீங்கள்தான் எடுத்து வரும்படி சொல்லவில்லையே என்று வேலையாள் சொன்னான். மடையா இனி எது விழுந்தாலும் எடுத்து வா என்றான். வேலையாளும் சரி ஆகட்டுங்க என்றான்.

மற்றொரு தடவை எஜமான் குதிரையில் போகும்போது குதிரை லத்தி போட்டது. உடனே வேலையாள் அவைகளையெல்லாம் வேட்டியில்

### சென்ற வார விடுகதைகளுக்கான விடைகள்


1. மின்விசிறி
2. தொலைபேசி
3. நெருப்பு
4. சேவல்
5. சோளக்கதிர்
6. உப்பு
7. உளுந்து
8. ஈ
9. ஈசல்
10. எறும்பு

## தாத்தா சொன்ன குட்டிக்கதை




மூட்டை ...டிக் கொண்டு போய் எஜமா... வீழுந்த இவைகளை எல்ல...ன்டு வந்து இருக்கின்றேன் ... அதற்கு எஜமானன் ஏண்டா மடப் பயலே இப்படி இதையெல்லாம் கட்டிக் கொண்டு வந்து இருக்கின்றாய்? என்றான். அதற்கு அவன் ஏனுங்க எஜமான் நீங்கள் தானே விழுகின்ற எதையும் விடாமல் எடுத்துவாடா என்று கூறினீர்கள் என்றான். அதற்கு எஜமானன் மூட்டை விழுந்ததற்குச் சொன்னால் அதற்காக இப்படியா செய்வது போடா மடையா என்று கூறினான்.அவன் என்ன பண்ணுவான் அவன் புத்தி அப்படி. அவன் புத்தி வளர்ச்சியடையும் படியான பக்குவம் அவனுக்கு அளிக்கப்பட வில்லை. அதுபோலத்தான் இன்று நமது சமுதாயத்தின் அறிவின் நிலையும் உள்ளது.

## பிரபஞ்ச இரகசியம் (கலீஸ் 581 குடும்பம்)




உயிரினம் வாழ ஓர் உலகம் துலா விண்மீன் மண்டலம்

விண்மீன் மண்டலங்களில் பல விண்மீனகள் உள்ளன என்பதை நாம் அறிந்துள்ளோம். நமது சூரியனும் ஒரு விண்மீன் தான். நமது சூரியனைச் சுற்றி கோள்கள் உளளன. அதில் ஒன்று நமது பூமி. அப்படியென்றால் பிற விண்மீன் மண்டலங்களில் உள்ள விண்மீன்களைச் சுற்றி கோள்கள் உண்டா? அப்படி உண்டென்றால் அந்தக் கோள்களில் உயிரினம் வாழ்கிறதா? என்ற கேள்விக்கு விடை.

ஆம். துலா விண்மீன் மண்டலத்தில் உள்ள ஒரு விண்மீனை 6 கோள்கள் சுற்றி வருகின்றன. இதில் இரண்டு கோள்கள் நமது பூமியைப் போன்ற பருவநிலையைக் கொண்டுள்ளன. அங்கு உயிரினம் வாழ வாய்ப்புகள் உள்ளதாக நமது அறிவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

**துலா விண்மீன் மண்டலம்**

கோடைவானில் தெளிவாகத் தெரியும் துலா விண்மீன் மண்டலத்தில் 13 பெரியவகை விண்மீன்களும் 43 சிறிய வகை விண்மீன்களும் பெயரிடப்படாத பல விண்மீன்களும் உள்ளன.

விருச்சிக மண்டலத்திற்கு அருகில் உள்ள துலா விண்மீன் மண்டலத்தை ஆய்வு செய்தபோது, கலீஸ்581 என்ற விணமீனைச் சுற்றி மொத்தம் 6 கோள்கள் சுற்றுவது கண்டறியப்பட்டது.

இவற்றிற்கு முறையே கலீஸ் எ, கலஸ் பி, கலீஸ் சி, கலீஸ் டி என முறையே பெயரிடப்பட்டுள்ளன. இந்தக் கோள்களை ஆய்வு செய்த கலிபோர்னியா, சாண்டா குரூஸ் பல்கலைக்கழகம் மற்றும் வாரிங்டன் கார்னிஜ் நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் 2003 ஆம் ஆண்டு ஆய்வு செய்தபோது கலீஸ் டி கோளில் உயிரினம் வாழும் சூழல் நிலவுவதுபற்றிக் கூறினார்கள். இவர்களைத் தொடர்ந்து வானியல் ஆய்வாளர் ஸ்டீவன் வோட் தலைமையில் ஆய்வு செய்த சிறப்புக் குழுவினர், கலீஸ் தொகுப்பில் உள்ள இரண்டு கோள்கள் பூமியைப் போன்று அதிக வெப்பமோ அதிக குளிரோ இல்லாமல் மிதமான காலநிலை நிலவுவதாகத் தெரிவித்தனர்.



நமது பூமியிலிருந்து 20 ஒளியாண்டு தொலைவில் உள்ள இந்தக் கோள்களின் வெப்பநிலை 31 முதல் -12 டிகிரி செல்சியஸ வரை இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பூமியை ஒத்த காலநிலை, பருவ மாற்றங்கள் சி மற்றும் டி கோள்களில் உள்ளன. சி கோளில் ஒரு நாள் என்பது 40 முதல் 62 மணி நேரமாக உள்ளது. ஈர்ப்பு சக்தி மற்றும் பாறைகள் ஆகியவை பூமியில் உள்ளதைப் போன்று காணப்படுகின்றன. எனவே, இந்தக் கிரகத்தின் மேற்பரப்பிலும் நீர் இருக்கலாம் என்று கருதப்பட்டு வருகிறது. 2011 ஆம் ஆண்டு நாசா அந்தக் கோளை நோக்கி ரேடியோ அலைகளை அனுப்பியது. 2020 ஆம் ஆண்டில் நாசா அனுப்பிய ரேடியோ அலைகள் சென்றடையும், அக்கோளில் உயிரினங்கள் இருப்பின் நாசா அனுப்பிய அதிர்வலைகள் அக்கோளில் பட்டு எதிரொலிக்கும் ரேடியோ அலைகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஒருவேளை இக்கோளில் உயிரினங்கள இருப்பின், அவர்கள் நம்மை வந்தடையவும் அல்லது நாம் அவர்களைச் சென்றடையவும் 500 முதல் 700 ஆண்டுகள் வரை ஆகலாம்.

## கதை கேளு கணக்குப் போடு


முத்துக்கள் விற்பனை செய்யும் வியாபாரி ஒருவரிடம் 9 முத்துக்கள் இருந்தன. அனைத்தையும் ஒரே நேரத்தில் விற்பனை செய்து பணமாக்க விரும்பினார். விற்பனை செய்ய யாரிடம் கொண்டு செல்லலாம் என யோசித்தார்.

உடனே அவருக்கு அந்நாட்டு அரசன் நினைவிற்கு வந்தார். நம் அரசனுக்குத்தான் 3 பெண்குழந்தைகள் உள்ளனரே! அரசனிடம் எடுத்துச் சென்றால் அனைத்து முத்துக்களையும் உடனடியாக வாங்கிக் கொள்வார் என நினைத்தார்.அரண்மனைக்குச் சென்று அரசனிடம் முத்துக்களை வரிசைப்படுத்திக் காட்டினார். அரசனுக்கும் அரசிக்கும் முத்துக்களைப் பார்த்ததும் மிகவும் பிடித்து விட்டது. என்ன விலை என்று கேட்டனர்.


அந்தக் காலத்தில் விலையைப் பணமாகக் கூறுவது வழக்கம். அதன்படி வியாபாரி, முத்துக்களை வரிசையாக வைத்து முதல் முத்து 1-பணம் , இரண்டாம் முத்து 2 பணம், மூன்றாம் முத்து 3 பணம், நான்காம் முத்து 4 பணம், ஐந்தாம் முத்து 5 பணம், ஆறாம் முத்து 6 பணம், ஏழாம் முத்து 7 பணம், எட்டாம் முத்து 8 பணம், ஒன்பதாம் முத்து 9 பணம் என்றார். விலையைக் கேட்ட அரசன் அனைத்து முத்துக்களையும் வாங்க விரும்பினார். வியாபாரியே, என் 3 பெண்களுக்கும் இந்த முத்துக்களை நீயே சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடு. முத்தும் சரியாக வர வேண்டும், விலையும் சரியாக வரவேண்டும். சிறு வேறுபாடுகூட வந்துவிடக் கூடாது என்றார்.வியாபாரியும், அரசரே தங்கள் விருப்பப்படியே பங்கிட்டுக் கொடுக்கிறேன் என்று பங்கிட்டுக் கொடுத்தார். வியாபாரி 9 முத்துக்களையும் எப்படிப் பங்கிட்டுக் கொடுத்தார்?
கண்டுபிடியுங்களேன்.

### முயற்சித்துப் பாருங்கள்


ஆரம்பத்தில் தரப்பட்ட உருவை ஒத்த உரு எது?





ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை மடித்தால் கிடைக்கும் அமைப்பு யாது?




ஆரம்பத்தில் உள்ள அமைப்பை ஒத்த உரு எது வெனக் கண்டு கீறிடுக.




கீழே தரப்பட்ட உருவிற்கு உச்சி, விளிம்பு, முகம் ஆகியவை சரியாக உள்ள படம் எது?





### சென்ற வார கதை கேளு கணக்குப் போடு விடை

1. மொத்த முத்துக்கள் 9
விலை 1+2+3+4+5+6+7+8+9 = 45 பணம்.
மூவருக்குச் சரியாகப் பங்கிட்டால் முத்து 3, பணம் 15.
ஒரு மகளுக்கு வரிசையில் 1,6,8 ஆம் முத்துக்கள்
இன்னொரு மகளுக்கு : வரிசையில் 2,9,4 ஆம் முத்துக்கள்
இன்னொரு மகளுக்கு : வரிசையில் 3,7,5 ஆம் முத்துக்கள்.

# மக்கள் நலனில் அக்கறையுடன் செயலாற்றுபவர் சந்திரகுமார்

## - பளை பிரதேசசபை உறுப்பினர் தெரிவிப்பு -



தனது மக்களின் நலன்களுக்காக தனக்குரிய அந்தஸ்த்துக்களை விட்டு எந்த நிலைக்கும் இறங்கிச் சென்று செயற்படுகின்ற ஒருவராக நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் காணப்படுகின்றார்.

இதற்கான மிகச்சிறந்த உதாரணம் காணியற்ற மக்களுக்கு காணிகளை பெற்றுக் கொடுப்பதற்காக வன வளத் திணைக்கள அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு ஏறி இறங்கியதனை குறிப்பிட முடியும் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உறுப்பினர் அன்ரன் அன்பழகன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தம்பகாமத்தில் மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு மேலாக சொந்த காணிகள் இன்றி வாழ்ந்து வரும மக்களிற்கு சட்டரீதியாக காணியினை பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த பிரதேசத்தில் நூறு ஏக்கர் பரப்பளவு காணியினை பல்வேறு நெருக்கடிகள் சட்டப்பிரச்சினைகளை கடந்து அமைச்சர் முதல் அதிகாரிகள் வரை ஒன்றுக்குப் பல தடவைகள் சந்தித்துப் பேசி வென்றுள்ளார். இது இந்த மக்களின் உச்ச பச்ச நலனுக்கானது. சொந்தமாக ஒரு காணி என்பது ஒரு மனிதனின் வாழ்வில் மிக முக்கியமானது எனத் தெரிவித்தார்.

தனது மக்களின் தேவைகள் என்ன என்பதனை அறிந்து அதனை நிவர்த்தி செய்து தருபவரை நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் செயற்பட்டு வருகின்றார்.

இந்த மண்ணில் வேறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்ற போதும் மக்களும் தங்களின் தேவைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரையே தேடிச் செல்வது வழக்கமாகிவிட்டது. வதந்திகளையும், அறிக்கைகளையும், உணர்ச்சிப்பேச்சுக்களையும் மக்கள் பணியாக எண்ணி செயற்படுகின்றவர்களின் மத்தியில் மக்களின் பிரச்சினைகளையும், தேவைகளையும் நிவர்த்தி செயகின்ற நாடாளுமன்ற உறுப்பினராக இவர் திகழ்கின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்


(யாழ்ப்பாணம்)

யாழ். மாநாகரசபை எல்லைக்குள் அமைந்த பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுப்பூசி வழங்கப்படத் திட்டமிடப் பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக ரூபா 20 செலுத்தப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்கள் வருமாறு:-

இன்று முற்பகல் 09மணி முதல் 11மணிவரை அரியாலை ஏ.வி.றோட் அருணோதய சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் 01.30மணிவரை அரியாலை திருமகள் சன சமூக நிலையத்திலும் நாளை முற்பகல் 09 மணி முதல் 11 மணிவரை நாயன்மார்கட்டு பாரதி சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி முதல் 01.30 மணி வரை நாயன் மார்கட்டு அம்பாள் சனசமூக நிலையத்திலும் நாளைமறுதினம் முற்பகல் 09 மணிமுதல் 11 மணிவரை அரியாலை சுயாபோட்டோவிற்கு முன்புறத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் 01.30 மணி வரை நாவலர்வீதி கனகரட்ணம் மகாவித்தியாலய முன்புறத்திலும் முற்பகல் 09 மணிமுதல் 11 மணி வரை அரியாலை பொன்னம்பலம்வீதி கலைவாணி சன சமூக நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படும் எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 11.30 மணிமுதல் 01.30 மணிவரை ஆள்காட்டிவீதி அருளம்பல வீதிச் சந்தியிலும், எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 09 மணிமுதல் 11மணி வரை புங்கன்குளம் வீதியிலுள்ள அரியாலை சனசமூக நிலையத்திலும், 11ஆம் திகதி முற்பகல் 09 மணிமுதல் 11 மணிவரை அரி யாலை சரஸ்வதி சனசமூக நிலையத்திலும், முற் பகல் 11.30 மணி முதல் 01.30 மணிவரை அரி யாலை AV றோட் மிருகவைத்திய நிலை யத்திலும், 12 ஆம் திகதி முற்பகல் 09 மணிமுதல் 11 மணிவரை அரியாலை இராஜேஸ்வரி வீதி நிறைபார்க்கும் மையத்திலும், முற்பகல் 11.30 மணிமுதல் 01.30 மணிவரை பெரிய பாலத்தடி ஆசீர்வாதப்பர் வீதியிலும், 15ஆம் திகதி முற்பகல் 09 மணிமுதல் 11மணிவரை அரியாலை முள்ளி வீதியிலும், முற்பகல் 11.30 மணிமுதல் 01.30 மணிவரை இலந்தைங்குளம் வீதி அம்மன் கோவிலடியிலும் 16ஆம் திகதி முற்பகல் 09 மணிமுதல் 1 மணி வரை கச்சேரியடி பேன்டிக்கோஸ் அருகில் முற்பகல் 11.30 மணிமுதல் 01.30 மணிவரை கச்சேரி கிழக்கு ஒழுங்கை ரவி பார்முன்புறத்தி லும்தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு நடைபெறவுள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



யுத்தத்தின் காரணமாக சேதமடைந்த தலைமன்னார் பியர்மடு ரயில்பாதையின் கட்டுமானப்பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பதிவிறக்கப் பெட்டகம்

ரீட்டா ஹேவொர்த் – 40 களின் பிற்பகுதியில் உலக ரசிகர்களை மயக்கிய நடிகை. நாடோடிக்குறத்தி (ஜிப்ஸி) நடிப்புக்கு இந்திய நடிகைகள் எல்லோர்க்குமே ஆதர்சம் இவர்தான். உலகத் திரைப்படத்தின் மகா கலைஞன் எனப்படும் ஆர்ஸன் வெல்ஸை திருமணம் செய்து விவாகரத்துப் பெற்றுக்கொண்டு உலகப் பணக்கார முஸ்லிமான அலிகானை மணந்து கொண்டார். ஆர்ஸன் வெல்ஸ் பற்றி ரீட்டா கூறியது: "ஒரு மேதையை யாரும் மணந்துகொள்ளக் கூடாது." – **அசோகமித்திரன்**

தமிழ்ப்படங்கள் அடிப்படையில் நாடகபாணிச் சித்திரங்களாகவே ஏற்றுக்கொண்டால் கூட "மகாதேவி" பார்ப்போரை உலுக்கிவிடக் கூடிய திரைப்படம். சாவித்திரியின் ஆற்றல், உலகின் எந்த மொழிக் கதாநாயகி நட்சத்திரங்களின் சிறப்புக்கும் குறைந்ததல்ல. அவர் காலத்தையும், அன்றைய சமூக அமைப்பையும், மதிப்பீடுகளையும் நினைத்துப் பார்க்கும்போது அவர் சாதனை ஒரு மேதைக்கே உரியது. – **அசோகமித்திரன்**

தமிழில் முதன்முதலில் ஒரு லட்சம் சம்பளம் வாங்கிய நடிகர் ஒரு காமெடியன் என்பதை இப்போதும் வியக்கிறார்கள். அவர் சந்திரபாபு. காமெடி என்பது உடல் மற்றும் முகத்தின் மொழி என்பதை அவரைக் கொண்டு நாம் கற்கலாம். காமெடி என்பது வாழ்வின் இயல்பு என்பதையே என்.எஸ்.கேயிடம் நம்மால் உணர முடிகிறது. காமெடி என்பது அடிமைத்தனமாக மாறியது நாகேஷ் காலத்தில்தான். காமெடியன் என்பவன் அவர் காலத்தில் ஹீரோவின் பின்னாலேயே அலைபவனாக ஸ்திரப்பட்டுவிட்டான். அது ஆரம்பத்திலிருந்தே வந்துவிட்ட வகைமைதான் என்றபோதும் நாகேஷ்தான் அந்த அவலத்தை அதிகமும் அனுபவித்தவர். சீ போடா முட்டாள் என்பதாகத்தான் பெரும்பாலான படங்களில் அவரை ஹீரோக்கள் அழைத்தார்கள். பார்வையாளனும் அதையே நம்பிவிட்டான். ஏனென்றால் ஒரு புத்திசாலி காமெடி செய்ய வந்தால் பார்வையாளன் காமெடியனாகிவிடுவான். இதற்கு நல்ல உதாரணம் சோ! அதனால் ஒரு முட்டாள் காமெடி செய்வதையே அவன் விரும்புகிறான். இவ்வாசை வளர்ந்து காமெடியன் என்றால் முட்டாள் என்கிற எண்ணத்தை அவன் அடைந்துவிடுகிறான். – **சுதேசமித்திரன்**

நாகேஷின் நடிப்பு தமிழ்த் திரைப்படஉலகிற்கு, இதன்தகுதிக்கு மிஞ்சிய ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லவேண்டும். நல்லவேளையாக டைரக்டர்களின் ஆளுகை தன்மீது கவிழ்ந்து அமிழ்த்தி விடாதவாறு பாதுகாத்துக்கொள்ளும் அதேசமயத்தில் ஒரு நடிகனுடைய எல்லைகளை மீறி நடந்துகொள்ளாதவர். தனது பாத்திரத்தைத் தன் கற்பனையினால் டைரக்டரோ, தயாரிப்பாளரோ எதிர்பாராத முறையில் மிகவும் சிறப்பாக அமைத்துக்கொள்கிற ஒரு புதுமையான கலைஞராகவும் இருந்தார்.
– **ஜெயகாந்தன்**

தான் தோன்றும் காட்சி மின்னல் அடித்த மாதிரியாகவும், புதுமையாகவும் இருக்க வேண்டுமென்று தன்னை மிகவும் வருத்திக் கொள்வார். ரசிகர்களின் கவனத்தையெல்லாம் மொத்தமாகத் தான் மட்டுமே ஈர்த்துக்கொண்டு, அரங்கத்திலிருக்கும் அத்தனை பார்வையாளர்களையும் சுருட்டித் தன் பாக்கெட்டிலே போட்டுக்கொள்ளும் அற்புதத் திறன் படைத்த ஓர் அபூர்வக் கலைஞர் நாகேஷ். – **கே.பாலச்சந்தர்**

ஒரு படம் மிகவும் வெற்றிப் படமாய் அமைந்தது. அதில் நடிகர் நாகேஷ் பங்கு முக்கியமானது. ஆனால் அதன் வெற்றி விழாவில் அவரைப் பற்றி ஒரு வார்த்தை கூடக் குறிப்பிடவில்லை.

மறுநாள் நாகேஷிடம் அவரது பத்திரிகை நண்பர் ஒருவர் வருத்தத்தோடு கேட்கிறார்.


அதற்கு நடிகர் நாகேஷ் "டேய், ஒரு வீடு கட்ட ஆரம்பத்திலே இருந்து கிரகப் பிரவேசத்துக்கு முன் நாள் வரை சவுக்கு மரக் கட்டைகளுடைய வேலை அதிகம்டா. ஆனால் மறுநாள் கிரகப் பிரவேசம், விருந்தாளிகள் எல்லாம் வருவாங்கன்னு, அன்றைக்குவரைக்கும் வெளியே வர்ணம் பூசுவதற்கு கூட சாரம் கட்ட உபயோகப்படுத்திய சவுக்குக் கட்டைகளை எல்லாம் வீட்டின் பின்புறம் எடுத்து போடச் சொல்லிவிட்டு மறைச்சு வைப்பாங்க. தவறி ஒரு கட்டை கண்ணில்பட்டாலும் திட்டு பலமா விழும். எல்லாம் மறைஞ்ச பிறகு, அதுவரைக்கும் எந்த உதவியும், எதற்கும் பயன்படாத வாழைமரத்தை வாசலில் கட்டி அலங்கரிச்சு அழகுபார்ப்பாங்க, இது தாண்டா உலகம்.

ஆனால் அந்த சவுக்குக் கட்டை இதுக்கெல்லாம் வருத்தப்படாமல் மறுநாள் அடுத்த வீட்டு வேலைக்குப் போக தயாராகிவிடும். அப்படித்தான்டா நானும்" என்றாராம் பெருமிதத்தோடு.



கொழும்பு மத்திய தபால் பரிமாற்றகத்துக்கு வெளிநாடுகளிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டு கைமாற்றப்பட்ட இலத்திரனியல் சார்ந்த உபகரணங்கள் கொழும்பு புறக்கோட்டை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட உபகரணங்களைக் காணலாம்.

# சீனாவிடம் வழங்கப்படும் நுரைச்சோலை பணிகள்



(கொழும்பு)

நுரைச்சோலை அனல் மின் நிலைய நடவடிக்கைகள் தொடர்பாக சீனாவிற்கு மேலதிக பணிகள் வழங்கப்படவுள்ளன.

சீன ஜனாதிபதி ஜி பிங் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வரும்போது இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தலைவர் டபிள்யூ.பீ கனேகல தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் அடிக்கடி மின் நிலையத்தில் ஏற்படும் தொழிற்பாட்டு நிறுத்தங்களை நிவர்த்தி செய்ய முடியும் என நம்பப்படுகின்றது.

135 கோடி அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை பராமரிப்பு மற்றும் தொழில் நுட்பம் போன்ற நடவடிக்கைகள், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் சீன தரப்பினரால் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், சீன ஜனாதிபதியின் இலங்கை விஜயத்தின் போது, அவரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் இணைந்து நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையங்களை பார்வையிடுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் வருடகால ஆரம்பத்தில் தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் சீன தரப்பினரால் மேற்கொள்ளப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பாலைமரக் குற்றிகளை கொண்டு சென்றவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, புதுமுறிப்பு பகுதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பாலைமரக் குற்றிகளை கப் ரக வாகனம் ஒன்றில் கொண்டுசென்றதாகக் கூறப்படும் ஒருவரை நேற்று முன்தினம் இரவு கைது செய்ததாக கிளிநொச்சி வட்டார வனவளத்துறை அதிகாரி எஸ்.பிரபாகரன் நேற்று தெரிவித்தார்.

கிளிநொச்சி வட்டார வனவளத்துறை அதிகாரியும், பூநகரி மற்றும் பளை வனவளத் துறை அதிகாரி எஸ்தணிகாசலமும் மேற்கொண்ட சோதனையின் போது இது கண்டுபிடிக்கப்பட்டது.

பாலைமரக் குற்றிகளை கிளிநொச்சி நகருக்கு கொண்டு செல்லும்போதே இவை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். இந்தச் சந்தேக நபருக்கு எதிராக கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பாக்.பிரஜைகளை வெளியேற்றுவதற்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவு நீக்கம்

## தீர்ப்பு வழங்கியது மேன்முறையீட்டு நீதிமன்றம்

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியுள்ள பாகிஸ்தான் பிரஜைகளை வெளியேற்றுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவை, மேன்முறையீட்டு நீதிமன்றம் நீக்கியது.

இலங்கையில் அடைக்கலம் கோரியுள்ள பாகிஸ்தானிய பெண்ணான அனீலா இம்ரான் தாக்கல் செய்திருந்த மனுமீதான வாதப்பிரதிவாதங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த மனு மீதான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டது.

இதன்போது, மன்றில் வாதாடிய அரச தரப்பு சட்டத்தரணி, விசா இன்றி இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகளை நாட்டிலிருந்து வெளியேற்றும் அதிகாரம் அரசாங்கத்துக்கு உள்ளது என்றார்.

அத்துடன், இலங்கையில் தங்கியுள்ள இவர்கள், பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. என்றும் குறிப்பிட்டார். பாகிஸ்தானைச் சேர்ந்த சுமார் 1,500 புகலிடக் கோரிக்கையாளர்கள் தற்போது இலங்கையில் உள்ளனர். இவர்களின் உயிர்களுக்கு பாகிஸ்தானில் ஆபத்து இருக்கின்றது. அதனாலேயே அவர்கள் இலங்கையில் புகலிடம் கோரியுள்ளனர்.

புகலிடம் கோருவோருக்கு இடம்கொடுப்பதாக ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்துள்ளது. சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைய இவர்களுக்கு அடைக்கலம் வழங்குமாறு இலங்கை அரசைப் பணிக்குமாறு அனீலா இம்ரான் தனது மனுவில் கோரியுள்ளார்.

அடைக்கலம் கோருவோருக்கு இடமளிப்பதாக இலங்கை, ஐ.நாவுடன் எந்த உடன்படிக்கையிலும் கைச்சாத்திடவில்லை என பிரதி சொலிஸ்ட்டர் ஜெனரல் ஜனக்க சில்வா, நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

ஆயினும், தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் கடைப்பிடிக்கவேண்டிய முறைகள் உள்ளன என்றும் அவர் கூறினார்.

புகலிடக் கோரிக்கையாளர்கள் சிலர் மலேரியா நோய் உள்ளவர்கள். இவர்களுக்கு புகலிடம் வழங்கி சுதந்திரமாக நடமாடவிட்டால் இங்கு ஒழிந்துபோன மலேரியா மீண்டும் பரவும் என்றும் அவர், நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

வாதப்பிரதிவாதங்களை கேட்டறிந்து கொண்டதன் பின்னரே, இந்த மனுமீதான தீர்ப்பு நேற்று திங்கட்கிழமை வழங்கப்பட்டது.

பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அகதிகளை நாடுகடத்துவதை உடனடியாக நிறுத்துமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம், அதிகாரிகளுக்கு ஆகஸ்ட் 15ஆம் திகதி உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தேர்தலில் சொந்தநிதி பயன்பாடு தடுப்பது குறித்து சட்டம் முன்மொழிவு



(கொழும்பு)

வேட்பாளர்கள் தங்கள் சொந்த நிதியில் இருந்து வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்குவதைத் தடை செய்யும் புதிய சட்டத்தை உருவாக்கும் முன்மொழிவை அரசாங்கத்திடம் தேர்தல்கள் திணைக்களம் சமர்ப்பிக்கவுள்ளது என அதன் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தேர்தல்கள் சட்டத்தில் பொது நிதியைப் பயன்படுத்தி வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்குவதற்கான தடைச் சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனால் சில வேட்பாளர்கள் தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்தி வேட்பாளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்களை வழங்கி வருகின்றனர்.

எனவே இதனைத் தடுக்கும் பொருட்டு வேட்பாளர்கள் தங்கள் சொந்த நிதியிலிருந்து பணம் மற்றும் அன்பளிப்புப் பொருள்களைத் வழங்குவதைத் தடை செய்யும் சட்டத்தை உருவாக்குமாறு தேர்தல்கள் திணைக்களம் அரசாங்கத்தைக் கோரவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம்

கிளிநொச்சி, பழைய ஊரியான் பகுதியில் 12 போத்தல் கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி பெண் நேற்று முன்தினம் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் தொடர்ந்து, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பெண தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனையடுத்து, நீதவான் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

# சவுக்கு மரங்களை பாதுகாக்கும் வகையில் விவசாய அமைச்சால் புதிய திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியில் உள்ள சவுக்குமரக்காட்டைப் பாதுகாக்கும் திட்டம் ஒன்றை வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு முன்னெடுத்துள்ளது.

இதற்கான தொடக்க நிகழ்ச்சி அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நேற்று முன்தினம் குடத்தனை சுடரொளி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு, ஆறுதல் ஸ்ரீலங்கா, மத்திய அரசின் வனவளத் திணைக்களம் ஆகிய மூன்றும் இணைந்து மேற்கொள்ளும் இத்திட்டத்துக்கான நிதியுதவியை எதிர்காலத்துக்கான கண்டல்கள் என்ற சர்வதேச நிறுவனம் வழங்கியுள்ளது.

இத்திட்டம் சவுக்குமரக் காட்டை பாதுகாக்கும் அதே சமயம், முத்திய மரங்களைத் தேரிவுசெய்து உரிய முறையில் அவற்றைக் களைவதன் மூலம் காட்டின் பொருளாதரப் பயன்களை மணற்காடு மற்றும் குடத்தனைப் பகுதியில் வாழுகின்ற மக்கள் அனுபவிக்கும் விதமாகவும் அமைந்துள்ளதாக அமைச்சினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது விறகு வியாபாரிகளினால் களவாகச் சவுக்குமரங்கள் அழிக்கப்பட்டுவரும் அதேசமயம் சவுக்குமரக்காட்டில் விறகுகளை எடுப்பதற்கும் சிறிய சவுக்குமரக் கிளைகளைத் தறிப்பதற்கும் விசேட அதிரடிப்படையினரும் கிராம சேவையாளர்களின் சிபார்சின் அடிப்டையில் அனுமதி வழங்கி வருகின்றனர்.

விசேட அதிரடிப்படை அதிகாரியை சந்தித்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன், இனிமேல் சவுக்குமரக்காட்டில் இருந்து விறகுகளைப் பெறுவதற்கோ மரங்களைத் தறிப்பதற்கோ அனுமதி கேட்டு வரும் கடிதங்கள் இத்திட்டத்துக்கென நியமிக்கப்பட்டிருக்கும் இணைப்பாளரின் ஊடாக வடக்கு சுற்றாடல் அமைச்சுக்கே அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும், உரிய பரிசீலனையின் பின்னர் அதற்கான அனுமதியை வடமாகாண சுற்றுச்சூழல் அமைச்சே வழங்கும் எனவும் தெரிவித்துள்ளார்.


# சுற்றுலா செல்லும் அமைச்சர்களுக்கு ஒழுக்கக் கோவை தயாரிப்பு

அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லும் போது நடந்துகொள்ளும் முறைமை தொடர்பில் விசேட ஒழுக்க நெறிக்கோவையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


இந்த சுற்றுலா பயணத்தின் போது அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்தல் தொடர்பிலும் அந்த கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அரச நிதி முகாமைத்துவம் மற்றும் முறையான பயன்பாடு என்ற தொனிப்பொருளில் இந்த கோவை ஏழு பக்கங்களை கொண்டிருக்கின்றது.


விசேட ஒழுக்க நெறி கோவை அடங்கிய சுற்றறிக்கை அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், பிரதேச சபை, நகர சபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

17. 


(i) 20
(ii) 30
(3) 40


18. 



(i) 7
(ii) 9
(iii) 11


19. 



(i) 9
(ii) 10
(iii) 12

* **சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதுக.**

20. 


21. 


22. 


23. 


இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளிவரும்




தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1.30 மணி


# கல்வி முரசு



பிழையான படத்தின் கீழ் கோடிடுக.


01. 



(i) A
(ii) B
(iii) D

02. 



(i) B
(ii) C
(iii) D


கீழே தரப்பட்ட அமைப்பில் ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை பெற தரப்பட்ட மூன்று உருவிலும் எதனை பார்க்கும்போது கிடைக்கும்

03. 


04. 


ஆரம்பத்திலுள்ள படத்திற்கு பொருத்தமான படம் எது.

05. 


06. 

(i) (ii) (iii)

* ஆரம்ப உருவுடன் ஒத்தஉருவின் கீழ் கோடிடுக.


07. 

(i) (ii) (iii)


08. 

(i) (ii) (iii)

* அடுத்து வரும் உரு எது எனக்கண்டு கோடிடுக.


09. 

(i) (ii) (iii)


10. 




வெற்றுக்கூட்டில் வரும் உருவை தெரிவுசெய்து கீறிடுக.

11. 

(i) (ii) (iii)


12. 

(i) (ii) (iiii)


13. 

(i) (i) (iii)


புள்ளிகோட்டில் வரவேண்டிய விடையின் கீழ் கோடிடுக.

14. 



(i) 32
(ii) 34
(iii) 36

15. 


(i) 10
(ii) 12
(iii) 14

16. 


(i) 10
(ii) 11
(iii) 12



கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் வீட்டுத்திட்டத்தின் இரண்டாவது பயனாளிக்கான வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது பிரதிநிதிகள் அழைத்துவரப்படுவதையும் பிரதிநிதியொருவர் மங்கள விளக்கேற்றுவதையும் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் வீட்டினை திறந்து வைப்பதையும் காணலாம். (48,51)

# வாழ்க்கையை மேம்படுத்தவே கடன் திட்டங்கள் வழங்கப்படுகின்றன

## மகேஸ்வரன் தெரிவிப்பு

30 வருடங்களாக போர்ச் சூழலிலே இருந்து படிப்படியாக நிவாரணங்களைப் பெற்று வந்திருக்கின்றோம் ஆனால் இனிவரும் காலத்தில் நிவாரணத்தைப் பெறும் நிலையில் இருந்து மாற வேண்டியுள்ளது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக அரசாங்கம் இவ்வாறான கடன் திட்டங்களை வழங்குவதற்கு தயாராகவிருப்பதாக யாழ்.மாவட்ட சமுர்த்தி மற்றும் வாழ்வின் எழுச்சி உதவி ஆணையாளர் கே.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்.மாநகர மேற்கு சமுர்த்திமகாசங்கத்தில் நடைபெற்ற இலகுகடன் திட்ட மான உதவும் க்ரங்கள் கடன் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் நாடளாவிய ரீதியில் இந்த இலகுகடன் திட்ட அறிமுக நிகழ்வு நடைபெற்று வருவதாகவும் அந்த வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள 33 சமுர்த்தி வங்கிகளிலும் இன்று இந்த இலகுகடன் திட்டம் வழங்கப்படும் நிகழ்வு நடைபெற்று வருவதாகவும் இதற்கான ஆரம்ப நிகழ்வாகவே இங்கு நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் கீழ் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் இதுவரை காலமும் 5 வீதம் தொடக்கம் 12 வீதம் வரையான வட்டிக்கடன்களை உங்களின் சமூகமட்ட அபிவிருத்தி திட்டங்களுக்காக பெற்று வந்திருக்கிறீர்கள். இதை நல்ல முறையில் நடாத்தி நெறிப்படுத்திய பெருமை ஜனாதிபதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஆகியோரையுமே சாரும் என்றும் தெரிவித்தார்.

இந்தக் கடன் திட்டத்தினை மக்களில் சிலர் நிவாரணத் திட்டமாகவே விளங்கிக்கொள்கின்றன். அது தவறு இது ஒரு இலகுகடன் திட்டமே என்றும் குறிப்பிட்ட அவர் பொதுமக்கள் இதனைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். நான்கு வீத வட்டியுடன் ஒரு வருடம் பின்தள்ளப்பட்டு செலுத்தக் கூடிய விதத்தில் 5 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை செலுத்தும் கடன் திட்டமாகவும் இது உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# கேணியில் நீராடியவரின் பணப்பை மாயம்

(யாழ்ப்பாணம்)

நேர்த்திக்கடன் நிறைவேற்ற கேணியில் நீராடிய அடியவர் ஒருவரின் பணப்பையும் மேலங்கியும் மாயமாக மறைந்த சம்பவம் ஒன்று நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம் பெற்றுள்ளது.

மேலங்கியை கழற்றி கேணிக்கு அருகில் நிறுத்திய மோட்டார் சைக்கிளில் வைத்து விட்டு நீராடியுள்ளார் மட்டுவிலைச் சேர்ந்த ஒரு அடியார். இவர் ஓரிரு நிமிடம் நீராடிவிட்டு ஆடை அணிய வந்தபோது காத்திருந்தது அதிர்ச்சி. என்ன மாயம்! கழற்றிய மேலங்கியும் பணப்பையும் மாயமாக மறைந்திருந்தன.

பணப்பையில் இருந்த பணம் வாகனச்சாரதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் வரிக்கான வரிப் பத்திரம் தேசிய அடையாள அட்டை என்பனவும் மாயமாகியிருந்தன.

இது விடயம் தொடர்பில் தற்போது சாவகச்சேரி பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. (இ)

# போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவு தெல்லிப்பளைக்கு மாற்றப்படுகிறது

## சிகிச்சை திகதிகள் அறிவிப்பு

எதிர்வரும் 06ஆம்,07 ஆம், 08 ஆம் திகதிகளில் யாழ். போதனா வைத்திய சாலையில் இயங்கிவரும் பெண் களுக்கான புற்றுநோயாளர் விடுதியானது வைத்தியசாலைக்கென புதிதாக கட்டப்பட்டு இயங்கி வரும் தெல்லிப்பளை பாதை (TRIAL) புற்றுநோயாளர் வைத்திய சாலைக்கு இடமாற்றப் படுவதற்கான வேலைகள் நடைபெறவிருப்பதால் இத் தினங்களில் யாழ்.போதனா வைத்திய சாலையில் பெண்களுக்குரிய புற்றுநோய் சிகிச்சைகள் எதுவும் நடைபெறமாட்டாது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி.பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

மேற்படி தினங்களில் ஏற்கனவே சிகிச்சைக்கு வரும்படி திகதி குறித்துக்கொடுக்கப்பட்ட நோயாளர்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி தெல்லிப்பளை புற்றுநோயாளர் வைத்திய சாலைக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் மேற்படி தினங்களில் அவசரமாக சிகிச்சை தேவைப்படுவோர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் எதிர்வரும் 09ஆம் திகதியிலிருந்து அனைத்து புற்றுநோயாளர்களுக்குமான சிகிச்சைகள் தெல்லிப்பளை புற்றுநோயாளர் TRIAL வைத்தியசாலையிலே நடைபெறவுள்ளதுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளருக்கான சிகிச்சைகள் எதுவும் நடைபெறமாட்டாது.

எனவே புற்றுநோயாளர்களின் நன்மைகருதி தினமும் 8 மணியிலிருந்து பி.ப 4 மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலையின் கிழக்கு புற வாசலில் இருந்து (பருத்தித்துறை வீதிப் பக்கமுள்ள) தெல்லிப்பளை புற்றுநோயாளர் (Trial) வைத்தியசாலைக்கு 3 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை நோயாளர்கள் செல்வதற்கான வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வெள்ளிக்கிழமைகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெறும் புற்றுநோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கிருசாந்தியின் புற்றுநோயாளர்களுக்கான கிளினிக் வியாழக்கிழமைகளில் தெல்லிப்பளை பாதை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் நடைபெறும். இதேபோல் சனிக்கிழமைகளில் யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெறும் புற்றுநோயியல் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி இ.கவிதாவின் புற்றுநோயாளர்களுக்கான கிளினிக் புதன் கிழமைகளில் தெல்லிப்பளை பாதை (Trail) புற்றுநோயாளர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# வாழைக்குலை விற்பனை பகுதி தனியான இடத்திற்கு மாற்றம்

(சுன்னாகம்)

மருதனார் மடம் சந்தையின் வாழைக்குலை விற்பனைப் பகுதி சந்தைக்கு வெளியே தனியார் காணி ஒன்றிற்குள் இடமாற்றப்பட்டுள்ளது.

எனினும் வாழைப்பழத்தின் விலை உயர்வடைந்து வருவதனால் வாழைக்குலைக்கு இப்போது மவுசு அதிகரித்துள்ளது. மருதனார் மடம் வாழைக் குலை சந்தையில் வெளியிடங்களில் இருந்து வரும் வர்த்தகர்கள் உற்பத்தியார்கள் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பேரம்பேசி வாழைக்குலை வாழை இலை என்பனவற்றை கொள் வனவு செய்ய முடியாத நிலை தொடர்ந்து காணப்படுகின்றன அத்துடன் வாழைக்குலைகளை சந்தைக்குள் வரவிடாது வீதியில் வைத்து வாங்குகின்ற நிலையும் காணப்படுவதால் வெளியிடங்களிலிருந்து வரும் வர்த்தகர்கள் அதிக விலை கொடுத்து குறித்த பொருட்களை வாங்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மருதனார்மடம் சந்தையின் புதிய கட்டடப் பணிகள் தற்போது ஆரம்பித்து நடைபெறுவதால் சந்தைக்குள் இருந்த சில விற்பனைப் பகுதிகள் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

# பனம்பழங்களால் இலையான் தொல்லை

தற்போது பனம்பழச் சீசன் தொடங்கியுள்ளதால் குடாநாட்டில் பனை மரங்கள் அதிகமாக உள்ள பிரதேசங்களில் இலையான்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் தொற்று நோய்களின் தாக்கம் அதிகரிக்கும் என பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். இலையான்களின் தாக்கம் அதிகமுள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை அழிக்க சம்பந்தப்பட்டவர்கள் நடைவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக புத்தூர் ஆவரங்கால் பகுதிகளில் இலையான்களின் தாக்கம் அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (66)

# பங்கேற்பு அபிவிருத்தி திட்டம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும்

## ஜீவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி.மேற்கில் உள்ள 25 கிராம அலுவலர் பிரிவும் நன்மை அடையத்தக்கதாகவே பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி பயன்படுத்தப்படும்.

மேற்படி அபிவிருத்தி திட்டங்கள் யாவும் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட பயனுறுதி வாய்ந்த நீடித்த நிலைத்த திட்டமாக இருக்கும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சி தலைவரும். வலிகாமம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபையின் ஊடான எதிர்கால உட்கட்டுமான அபிவிருத்திக்கு பொருளாதார அபிவிருத்திக்கு அமைச்சின் பங்களிப்பு எனும் தலைப்பில் எதிர்க்கட்சித் தலைவர் பாலகிருஷ்ணன் மேலும் தெரி விக்கையில்,

வலி.மேற்கு பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவினை உள்ளடக்கிய பரந்த பிரதேசம் இப்பிரதேசத்தின் பெரும்பாலான வீதிகள், மயானங்கள், சனசமூக நிலையங்கள், சிறு பாலங்கள், வாய்க்கால்கள், குடிதண்ணீர் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

இதில் மக்களுக்கு உடனடியாக பெரிதிதும் உதவக்கூடிய திட்டங்களை இனம்கண்டு முதற்கட்டமாக வீதிகளை முன்னுரிமை அடிப்படையில் முதன்மைப்படுத்தியுள்ளோம்.

இத்திட்டம் எதிர்காலத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்படும் பட்சத்தில் தொடர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படும் எனவே பொருளாதார அமைச்சின் அபிவிருத்தி உட்கட்டுமானத்திற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் வேண்டி நிற்கின்றேன் என்றார் சிவகுரு பாலகிருஷ்ணன். (92)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................

முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................

பெற்றோர் கையொப்பம்

## தாகம் தணிக்கும் குடிநீர் ஏ.ரி.எம்.



மக்களின் தண்ணீர் தாகத்தை தீர்ப்பதற்காக கிராமங்களில் குடிநீர் ஏ.டி.எம். மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. குடிநீர் பஞ்சம் நிலவும் கிராமங்களில் "ஜவன் அம்ரித்" என்ற திட்டத்தை ராஜஸ்தான் அரசு அமுல்படுத்தியுள்ளது.

இதன்படி கவாஸ், குடா, ஜோகாசாகர், பைட்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் குடிநீர் வழங்கும் ஏ.டி.எம்.கள் திறக்கப்பட்டுள்ளன.

இம் மையங்களில் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது, இதற்காக கிராம மக்களுக்கு ஸ்மார்ட் கார்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த கார்டை பயன்படுத்தி ரூ.5 விலையில் 20 லிற்றர் குடிநீரை பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்தின் மூலம் தற்போது 22 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைகின்றனர், வருங்காலத்தில் ஏ.ரி.எம். மையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஜப்பானின் திறன் மேம்பாட்டை பின்பற்ற இந்தியா ஆர்வம்

(டோக்கியோ)

இந்தியாவிலும், ஜப்பானிலும் ஆட்சி நடத்த அந்தந்த நாட்டு மக்கள் அரசுக்கு பெருபான்மை பலம் அளித்துள்ள நிலையில் திறன் மேம்பாட்டில் ஜப்பானை பின்பற்ற இந்தியா விரும்புவதாக மோடி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டில் 3 ஆவது நாளாக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, டோக்கியோவில் நடைபெற்ற வர்த்தக கூட்டமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது பேசிய அவ...

ஜப்பான் வங்கிக... ந்தியாவில் கிளைகள் தொடங்க அனுமதி... ப்பட்டுள்ளதாகவும் தாம் ஆட்சிக்கு வந்... ங்களில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாகவும் அவர் பெருமிதத்துடன் கூறினார்.

இந்தியாவிலும், ஜப்பானிலும் ஆட்சி நடாத்த அந்தந்த நாட்டு மக்கள் அரசுக்கு பெருபான்மை பலம் அளித்துள்ளதாக குறிப்பிட்ட மோடி, திறன் மேம்பாட்டில் ஜப்பானை பின்பற்ற இந்தியா விரும்புவதாகவும் கருத்து தெரிவித்தார்.

மேலும் ஆராய்ச்சி, மேம்பாட்டுத் துறையில் ஜப்பானுடன் இணைந்து செயற்படவும் மோடி விருப்பம் தெரிவித்தார்.

குஜராத் முதல்வராக இருந்த போதே ஜப்பான் நாட்டுடன் தாம் இணக்கமாக செயற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அவர் மாற்றத்துக்கான தேவை மிகப்பெரிய வாய்ப்பை உருவாக்கியுள்ளதாகவும் கூறினார்.



21 ஆம் நூற்றாண்டு ஆசியா கண்டத்திற்குரித்தானது என்று உலகம் ஒப்புக் கொண்டுள்ளதாக கூறிய மோடி, இந்த நூற்றாண்டை ஆசியாவிற்கானதாக மாற்ற என்ன செய்யப்போகிறோம் என்று கேள்வி எழுப்பினார்.

ஆசியாக் கண்டத்தில் அமைதி, நிலைத்தன்மை நிலவ இந்தியா - ஜப்பான் உறவு அவசியம் என்று வலியுறுத்தினார்.

தொழில் நடாத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி தரவேண்டியது அரசின் கடமை என்றும், ஜப்பானியர் இந்தியாவில் தொழில் தொடங்க அனைத்து உதவிகளும் செய்து தரப்படும் என்றும் பிரதமர் மோடி பேசினார்.

## மாநில அந்தஸ்து கோரி ரஷ்யர்கள் போராட்டம்

(மாஸ்கோ)

உக்ரைனின் கிழக்கு பகுதியில் ரஷ்யர்கள் அதிகம் உள்ளனர். அவர்கள் கிழக்கு உக்ரைனுக்கு தன்னாட்சி அதிகாரம் கேட்டு போராடி வருகின்றனர். தற்போது அது உள்நாட்டு போர் ஆக மாறிவிட்டது.

கிழக்கு உக்ரைனில் ரஷ்ய ஆதரவு போராட்டக்காரர்கள் வசம் பெரும்பாலான நகரங்கள் உள்ளன. அவற்றை மீட்க இராணுவம் கடும் சண்டையிட்டு வருகிறது.

போராட்டக்காரர்களுக்கு ரஷ்யா ஆயுதம் மற்றும் பண உதவி செய்வதாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன. இதனால் ரஷ்யாவுக்கு அவை பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

இதற்கிடையே கிழக்கு உக்ரைனில் அமைதி நிலவ பெலாரஸ் தலைநகர் மின்ஸ்க் நகரில் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் ரஷ்ய மற்றும் உக்ரைன் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர்.

போராட்டக்காரர்கள் தரப்பில் பங்கேற்பது குறித்த தகவல்கள் இல்லை.இந்த நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார்.

அதில், "பிரச்சினைக்கு முடிவு கட்டி உள்நாட்டு போரை முடிவுக்குகொண்டு வர கிழக்கு உக்ரைனுக்கு மாநில அந்துஸ்து வழங்க வேண்டும். அதுவே அங்கு வாழும் மக்களின் நோக்கமாகும் மேலும் அது அவரகளுக்கு சட்ட பாதுகாப்பை வழங்கும் என தெரிவித்தார்.

## அமெரிக்க விமானங்கள் ஈராக்கில் குண்டுவீச்சு


(கிர்குக்)

மூன்று மாதங்களாக, ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகள் முற்று கையில் உள்ள, ஷியா பிரிவு முஸ்லிம்கள் நிறைந்த அமெர்லி நகரில், அமெரிக்கா மற்றும் ஈராக் இராணுவம் தாக்குதலை நடாத்தி, பயங்கரவாதிகளை கொன்று குவித்து, அந்நகரை மீட்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

மேற்கு ஆசிய நாடுகளான சிரியா மற்றும் ஈராக்கில் ஆதிக்கம் செலுத்தி வரும், அல் - குவைதா ஆதரவு, ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகள், கடந்த ஜூன் மாதம், ஈராக்கின் முக்கிய நகரங்கள் சிலவற்றைக் கைப்பற்றினர். அவற்றில் ஒன்றான, ஷியா பிரிவு முஸ்லிம்கள் மற்றும் துர்க் இன மக்கள் நிறைந்த, அமெர்லி நகரையும் கைப்பற்றினர்.

இதற்கிடையே, ஈராக்கின் அண்டை நாடான சிரியாவில், மூன்றாண்டுகளாக நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையில், ஐ.நா., அமைதி காப்பு படையின் பிலிப்பைன்ஸ் நாட்டு படைப் பிரிவைச் சேர்ந்த சில வீரர்கள், அஙகுள்ள, அல் - குவைதா ஆதரவு, அல - நஸ்ரா பயங்கரவாதிகளுடன் சண்டையிட்டு வந்தனர்.

## சுகாதார அதிகாரிகளுக்கும் "எபோலா" வைரஸ் பாதிப்பு



நைஜீரியாவில் எபோலா நோய்க்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவருக்கு வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதுவரை இந்நோயால் 120 சுகாதார அதிகாரிகள் பலியான நிலையில், மேலும் 240 பேருக்கு பாதிப்பு இருப்பது உறுதியாகியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் மேற்கு ஆப்பிரிக்க நாடான கினியாவில் தென்படத்தொடங்கிய எபோலா விஷத் தொற்று நோய் அதன் அண்டை நாடுகளான லைபீரியா, சியராலியோன், நைஜீரியா போன்ற மேற்கு ஆபிரிக்க நாடுகளில் வரிசையாக பரவியது.

உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கைப்படி, ஆகஸ்ட் 26 ஆம் திகதி வரை இந்நோய்க்கு 1,552 பேர் பலியாகியுள்ளனர்.

3,062 பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனிடையே 'எபோலா' வைரஸ் மேற்கு ஆபிரிக்க நாடுகளில், மிக வேகமாகப் பரவி வருகிறது என்றும், அதை கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் எல்லாமே மிக மெதுவாகவே நடக்கின்றன என்றும், உலக சுகாதார அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.



பெர்லினில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய ஜேர்மனி அதிபர் ஏஞ்சலா மெர்கல்.

## விஜயகாந்த் - நெப்போலியன் சமரசத்தை ஏற்படுத்த சந்திப்பு

தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்தை, தி.மு.க.வைச் சேர்ந்த நடிகர் நெப்போலியன் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார். அழகிரி தரப்பில், விஜயகாந்தை சமரசம் செய்வதற்காக இந்தச் சந்திப்பு நடந்ததாக கூறப்படுகிறது.

ஆனாலும், தே.மு.தி.க. வட்டாரத்தில் கூறப்படுவதாவது, தொழில் காரணமாக நடிகர் நெப்போலியன் அமெரிக்காவில் வசித்து வருகிறார். கடந்த மூன்று நாட்களுக்கு முன், அவர் சென்னை வந்தார். விஜயகாந்தை சந்திக்க வேண்டும் என அனுமதி கேட்டார்.



அனுமதி தரப்பட்டதால், நேற்று முன்தினம் நெப்போலியன் கட்சி அலுவலகத்திற்கு வந்தார். நெப்போலியனுடன் அவரது ஆதரவாளர்கள், 10 இற்கும் மேற்பட்டவர்கள், தனித்தனி கார்களில் வந்திருந்தனர்.

விஜயகாந்தும், அவரும், அரை மணிநேரம் பேசினர். லோக்சபா தேர்தல் கூட்டணி தற்போதைய அரசியல் சூழ்நிலை சட்டசபை தேர்தல் கூட்டணி உட்பட பல விஷயங்கள் குறித்து, இருவரும் பேசியுள்ளனர்.

விஜயகாந்தை விமர்சித்ததால், கூட்டணி பாதித்ததாக, அழகிரி மீது கருணாநிதி கோபமாக உள்ளார். தற்போது, அழகிரியை மீண்டும் தி.மு.க.வில் சேர்ப்பதற்கு, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

இந்த நேரத்தில், விஜயகாந்தை சமரசப்படுத்தி, அதன் மூலம் கருணாநிதியை திருப்திப்படுத்துவதற்கு, இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவும் வாய்ப்புள்ளது. இவ்வாறு, தே.மு.தி.க., வட்டாரத்தில் கூறப்படுகிறது.

# தீவகத்திலும் “உதவும் கரங்கள்” ஆரம்பித்து வைத்தார் உதயன் எம்.பி.



தமிழ் மக்களினது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி தனிநபர் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தினை காண விரும்பாது வாழ்வின் எழுச்சித்திட்டத்தினை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என ஈ.பி.டி.பி.யின் நா.உ சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

ஊர்காவற்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற உதவும் கரங்கள் நிகழ்ச்சித் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மக்களை வறுமையெனும் பிணியில் வீழ்த்தி எதைச்சாதிக்க துணிந்து மக்களிற்கு கிடைக்கும் உதவித்திட்ட்த்தினை நிறுத்துவதற்காக நீதிமன்றம்வரை சென்று குரல் கொடுத்தார்களோ தெரியவில்லை.

தேர்தல் காலங்களில் மக்களிடம் உங்களிற்காக குரல் கொடுக்கப்போகின்றோம் என்று பிதற்றி வாக்குகளை ஏப்பம் விடுபவர்கள் தேர்தல் முடிவடைந்ததும் பதவி பெற்ற பின்பு மக்களிற்கு கிடைக்கவிருந்த உதவித்திட்டங்களை நிறுத்துவதற்கு ஓங்கிக்குரல் கொடுத்தார்கள். நீதிமன்றம் வரை அது ஒலித்தது.

நயவஞ்சகர்கள் குரல் எங்கும் செல்லுபடியாகவில்லை. வறிய மக்களே தனது உறவுகள் என்று எண்ணும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அனைத்து தடைகளையும் தகர்த்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளுடன் வாழ்வின் எழுச்சி திட்டம் நிறைவேற்றப்பட்டு அமுல் படுத்தப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் எமது மக்களிற்கு சுயதொழிலுக்கான உதவி தொடக்கம் மாணவர் கல்விக்கான உதவித்திட்டங்கள், வீட்டுத்தோட்டம், மானியங்கள், மூலதனக் கடனுதவிகள் போன்ற அனைத்துமே வழங்கப்பட்டு குடும்பத்தினரினதும் மாணவர்களினதும் வாழ்வானது வாழ்வெழுச்சித் திட்டத்தினூடாக எழுச்சி பெற்று வருகின்றது.

இவ்வாறான திட்டங்களை எமது மக்களின் நலன்கள் கருதி அரசுடன் இணைந்து நாம் வழங்கும் போது அவற்றை நிறுத்துவதற்கு தயாராகியவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

தமிழ்மக்கள் சுபீட்சகரமான வாழ்வுபெறுவதை விரும்பாது அதில் மண் அள்ளிப் போடும் செயற்பாட்டை புரிய எண்ணிய இவர்களை துரோகிகள் என்றே கூறமுடியும் இவர்களிற்கு இதுவொன்றும் புதிதல்லவே. தமிழ் மக்களிற்கு வரப்பிரசாதகமாக கிடைத்த இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்கனவே நாசமாக்கி தமிழ் இனத்தை நடுத்தெருவிற்கு கொண்டுவந்த பெருமையும் இவர்களையே சாரும்.

மக்களின் வாழ்வர்தாரத்திற்கும் அவர்களின் அன்றாட செயற்பாடுகளிற்கும் இவர்களால் எதுவும் செய்யமுடியாது என்பது அனைவருக்கும் தெரியும். எனினும் மக்களிற்கு கிடைக்கும் திட்டத்திற்கு முட்டுக்கட்டையாக இல்லாது இருக்கட்டும் மக்கள் வாழ்வை நாம் செழிக்க வைப்போம் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து 50 ஆயிரம் மற்றும் 5 ஆயிரம் ரூபா கடனுதவித் திட்ட கடன்கள் வழங்கப்பட்டன. இதேபோன்று வேலணை, காரைநகர் மற்றும் நெடுந்தீவு பகுதிகளில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சித் திட்ட பயனாளிகளுக்கு உதவும் கரங்கள் கடனுதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

## உதவும்...

சமுர்த்தி வங்கியில் குறித்த கடன் திட்டம் விடுவிக்கும் ஆரம்ப நிகழ்வு நடைபெற்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட இந்த ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கடன் திட்டம் எமது மக்கள் விளங்கிக் கொள்ளக் கூடிய வகையில் அதன் பெயர் அமைய வேண்டும் என்பதை நோக்காகக் கொண்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு கதைத்ததன் பலனாகவே இந்தத் திட்டத்திற்குரிய தமிழ்ப் பெயர் பாவனைக்கு வந்துள்ளதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார். அங்கு அரச அதிபர் மேலும் குறிப்பிடுகையில்,

யாழ். மாவட்டத்திலுள்ள 33 சமுர்த்தி வங்கிகளிலும் உதவும் கரங்கள் கடன் திட்டத்தின் மூலம் 665 பயனாளிகள் பய்னடையவுள்ளதாகவும் தெரிவித்த அரச அதிபர், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் உள்ளோரது வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் இந்த இலகு கடன் வழங்கப்படுகிறது. அந்த நோக்கம் பூர்த்தி செய்யப்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (௨௫)(பா)

## அரசுடன்...

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த மாத இறுதியில் நடைபெற்ற இலங்கை ஆயர் பேரவையின் கூட்டத்தொடரின் இறுதியில் இலங்கை ஆயர்கள் இணைந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்தோம். அங்கு ஆயர்கள் நாம் தற்போதைய நாட்டின் நெருக்கடிகள் குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடினோம்.

குறிப்பாக பொதுபல சேனாவுடைய அத்துமீறிய செயற்பாடுகள், இராணுவத்தின் நில அபகரிப்புப் போன்ற விடயங்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. யாழ். ஆயர் என்ற முறையில் நான் குறிப்பாக இரு விடயங்கள் பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினேன்.

முதலாவதாக, போர் முடிந்து ஐந்து வருடங்களும் மாகாண சபை நிறுவப்பட்டு மூன்று ஆண்டுகளும் கடந்தும் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் தவிர்ந்த எந்த வித அரசியல் தீர்வுகளும் தமிழர்களுக்கு முன்வைக்கப்படவோ கொடுக்கப்படவோ இல்லை என்பதும், இரண்டாவத்ாக தமிழர் குடிநிலங்களும், அவர்களது வணக்கத் தலங்களும் இராணுவத்தின் நில அபகரிப்புக்கு உள்ளாவதும் மிக வேதனைக்குரியது என்று தெரிவித்தேன்.

மாகாண சபையினரோ முதலமைச்சரோ அரசுடன் இணைந்து செயற்பட முன்வருவதில்லை. கொடுக்கப்படுகிற அழைப்புக்களை ஏற்று எந்தக் கூட்டங்களுக்கும் சமூகம் கொடுப்பதில்லை, அவர்கள் அரசுடன் இணைந்து செயற்படாதவரை எம்மால் எதையும் செய்ய முடியாது.

மக்கள் குடியிருப்புக்கள் ஒருபோதும் அபகரிக்கப்பட மாட்டாது; அந்த நிலப்பரப்பு தற்போது அளவிடப்பட்டு வருகின்றது. விரைவில் அவை உரியவர்களுக்கு வழங்கப்படும். வணக்கத் தல பிரதேசங்களும் விரைவில் மீளக் கையளிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி பதிலளித்தார்.

அதேவேளை யாழ். திரும்பிய ஆயர், முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஆனோல்ட் உட்பட மாகாண சபையினரை யாழ். ஆயர் இல்லத்தில் சந்தித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின் விடயங்கள் பற்றிப் பேசினார்.

இதற்கு விளக்கம் கொடுத்த முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார். பல முறை பல கூட்டங்களுக்குச் சென்று எந்தவித ஆக்கபூர்வமான விடயங்கள் எவையும் செயற்படுத்தப்படவில்லை. தமிழர்கள் அபிலாஷைகள் எதையும் பூர்த்தி செய்யவேண்டும் என்ற எண்ணமும் அரசிடம் தென்படவில்லை. எனவேதான் நாம் அரசின் அழைப்பை நிராகரிப்பதற்குரிய காரணமாயிற்று என்றார்.

இந்நிலையில் யாழ். ஆயர் பாதுகாவலனுக்குக் கருத்துக் கூறும்போது, தமிழர்களின் எதிர்கால நலனையும் அபிலாஷைகளையும் கருத்தில் கொண்டு அரசும், மாகாண சபையினரும் ஒருவர் மீது ஒருவர் பிழைகளைக் காண்பதைத் தவிர்த்து உடன் தமிழர் நலனுக்காக இணைந்து செயற்பட வேண்டிய அவசர தேவை இன்று உள்ளது. இதற்கு இரு தரப்பினரும் பொதுநலனைக் கருத்தில் கொண்டு இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என்றார்.

## கண்ணிவெடி...

பிரித்தானியா வழங்கவுள்ளதாகவும் ரங்கீன் தெரிவித்தார்.

ஹலோ ட்ரஸ்ட் நிறுவனமே பிரித்தானிய ஆதரவுடன் நிலக்கண்ணி வெடி அகற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யதார்த்தம்...

விட்டோம். அவர் பக்கசார்பாக செயற்பட்டார் என நாம் நம்புகின்றோம். விடயங்களை அறியாமல் அவர் செயற்பட்ட விதம் அநீதியானது. எனவே இவை அனைத்தையும் புரிந்து கொண்டு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர் சரியான முறையில் செயற்படுவார் என்பதில் நம்பிக்கை கொள்கிறோம்.

ஜனாதிபதியின் மனித உரிமை தொடர்பிலான பிரதிநிதியாக செயற்பட்ட அமைச்சர் மகிந்த சமரசிங்க இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

## பாலா தம்பு...

பிலுள்ள தனியார் மருத்துவமனையில் நேற்று காலமானார்.

குற்றவியல் வழக்கு தொடர்பான சட்டத்தரணியான அவர் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளராக பணியாற்றி வந்தார். 1922 ஆம் ஆண்டு மே மாதம் 23ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தின் முக்கிய குடும்பத்தில் பாலா தம்பு பிறந்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி கற்ற அவர் 1943 ஆம் ஆண்டு சிலோன் பல்கலைக்கழகத்திலும் பின்னர் 1944 ஆம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்றார்.

92 வயதான பாலா தம்பு இலங்கை பல்கலைக்கழகம் மற்றும் லண்டன் பல்கலைக்கழகத்தில் பி.எஸ்.பி. பட்டப்படிப்பை மேற்கொண்டார். இலங்கை விவசாய திணைக்களத்தில் பணியாற்றிய அவர் 1947 ஆம் ஆண்டு அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் இணைந்து கொண்டார்.

இலங்கையில் ஏனைய தொழிற்சங்கவாதிகளை காட்டிலும் மிகவும் திடசங்கற்ப தொழிற்சங்கவாதியாக பாலா தம்பு செயற்பட்டார். 1928 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சி.எம்.யூ. தொழிற்சங்கத்தில் 1948 ஆம் ஆண்டு பாலா தம்பு பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இவரின் தலைமையில் 1963 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் கொழும்பு துறைமுகத்தில் ஆரம்பித்த பணிப்புறக்கணிப்பு நாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இலங்கையில் தொடர்ந்தும் மூன்று மாதங்களாக நீடித்த தபால்துறை பணிப்புறக்கணிப்பிலும் பாலா தம்பு முக்கிய பங்கை வகித்தார்.

## இந்திய மீனவர்...

சென்று வருவதற்கு இலவசமாக ஹெலியின் உதவியை கூட்டமைப்பினர் கேட்டிருந்ததையும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இதனிடையே மக்களின் தேவைக்கு ஒருவிதமாகவும் தமது தேவைக்கு ஒருவிதமாகவும் அணுகுமுறைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கையாண்டு வருகின்றனர்.

ஆனால் நாம் மக்களின் அரசியல் உரிமை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதையே வலியுறுத்தி வரும் அதே வேளை, எமது இணக்க அரசியல் மூலம் பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்றிட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம்.

அதுமட்டுமன்றி எமது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக மேலும் பல உதவித்திட்டங்களை அரசின் ஊடாக பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்த அமைச்சர், வடமாகாண ஆளுநர் சந்திரசிறி வடமாகாணத்தின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்துக்கும் தடையாக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது சுயலாபத்திற்காக விஷமப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களின் இக்கூற்றானது ஆடத் தெரியாதவனுக்கு மேடை கோணலாக இருப்பது போன்று நகைப்பாக உள்ளதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதனிடையே இந்திய மீனவர்களின் அத்துமீறியதும் தடைசெய்யப்பட்டதுமான தொழில் நடவடிக்கைகளால் எமது கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படுவதையும் வளங்கள் அழிக்கப்படுவதையும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் நான் எடுத்து விளக்கியிருந்த நிலையில் இதுவிடயம் தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியுடனான கலந்துரையாடலின் போது இந்தியப் பிரதமர் கால அவகாசம் கேட்டிருந்த நிலையில் அதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மறுப்பு தெரிவித்திருந்தார்.

ஆனால் அண்மையில் இந்தியப் பிரதமரை தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்திருந்தபோது அவர் கேட்டுக் கொண்டதற்கமைவாக கால அவகாசத்தை வழங்குவதாக கூட்டமைப்பினர் தெரிவித்திருந்தனர்.

இதன்காரணமாக தற்போது வடபகுதி கடற்பரப்பில் அத்துமீறியதும் தடைசெய்யப்பட்டதுமான இந்திய மீனவர்களின் தொழிற்துறை நடவடிக்கைகளால் எமது மீனவர்கள் நாளாந்தம் பல்வேறுபட்ட இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாகவும் இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கால அவகாசம் வழங்கியதே முக்கிய காரணமென்றும் சுட்டிக்காட்டினார்.

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியின் கைதடி கிளையின் முகாமையாளர் பிரதீபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உரைநிகழ்த்தினார்.

இதில் வாழ்வின் எழுச்சி திணைக்கள பணிப்பாளர் அனுர எஸ்.வீரரத்ன, வாழ்வின் எழுச்சி திணைக்கள உதவி ஆணையாளர் மகேஸ்வரன், திட்ட இணைப்பாளர் ரகுநாதன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி, யாழ். மாநகர முன்னாள் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி பிரதேச இணைப்பாளர் சாள்ஸ், அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் குகேந்திரன், ஈ.பி.டி.பி.யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# 'உதவும் கரங்கள்' கடன் திட்டம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு வரப்பிரசாதம்



வறிய மக்கள் அதிகமாக வாழும் கிளிநொச்சி போன்ற மாவட்டத்திற்கு வாழ்வின் எழுச்சி திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிகளுக்கு ஊடாக வழங்கப்படுகின்ற கடன்கள் மிகவும் பொருத்தமான வறுமை ஒழிப்புத்திட்டமாகும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் உதவும் கரங்கள் வாழ்வாதாரக் கடன்கள் சுய தொழிலுக்கான ஐம்பதாயிரம் ரூபா கடன் ஆயிரத்து 821 பேருக்கும், நுகர்ச்சி கடன் இரண்டாயிரத்து 15 பேருக்கும் வழங்கும் ஆரம்ப நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு கடன்களை வழங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று வாழ்வாதார மேம்பாட்டிற்கு ஒருவர் சுயதொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்காக வங்கிகளில் கடன் பெறுவது என்பது கடினமான விடயமாக இருக்கின்றது. நிபந்தனைகள், சிபார்சுகள், பிணைகள், அதிக வட்டி என நிலைமைகள் காணப்படுகிறது. ஆனால் இங்கு அவ்வாறில்லை இலகுவாக ஒருவர் கடனை பெற்றுக்கொள்ள முடியும் வயதெல்லை கிடையாது, பிணை இல்லை வருட வட்டி நான்கு வீதம் என நிலைமைகள் காணப்படுகிறது இதனை விட கட்னை பெற்று ஒரு வருடத்திற்கு பின்னரே மீளச் செலுத்தும் காலம் ஆரம்பிக்கின்றது. மாதாந்த தவணைக்கட்டணம் 2 ஆயிரத்து 250 ரூபா, வருடம் ஒன்றுக்கு மொத்த வட்டி 2 ஆயிரம் ரூபா மட்டுமே. எனவே மக்கள் இந்தச் சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் ஊடாக வறுமை ஒழிப்புத்திட்டத்திற்கு அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இது போன்ற திட்டங்களை மக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

கிளிநொச்சியில் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம்தான் எனவேதான் இங்கு அதிக நிதி சேமிப்பில் இல்லை நாம் தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் மாவட்டத்தின் சமுர்த்திக்கு விசேட நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளோம் அவரும் அதற்கான உத்தரவாதத்தினை வழங்கியுள்ளார். அந்த நிதி கிடைக்கின்ற போது கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி செயற்பாடுகள் மேலும் விரிவுபடுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கரைச்சி பிரதேச செயலாளர் கோ. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேசசபை உறுப்பினர்கள் சு.மனோகரன், இராமச்சந்திரன், வாழ்வின் எழுச்சி திணைக்களத்தின் வலயம் 6 இற்கான நுண்நிதி பணிப்பாளர் திருமதி பிறைசூடி, கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் இப்ரான், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளர் சிவகுமார், சமுர்த்தி வங்கி கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் உருத்திரமூர்த்தி, கிளிநொச்சி சமுர்த்தி வங்கி முகாமையாளர் யசோதினி, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# பனைவெல்லத்தில் உரம் 7 ஆயிரம் ரூபா அபராதம்

மனித பாவனைக்கு உதவாத விவசாய பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் உரத்தைப் பயன்படுத்தி பனைவெல்ல உற்பத்தி செய்த ஊர்காவற்றுறை பனை தென்னை வளக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளருக்கு 7 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து ஊர்காவற்துறை நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், உரம் பயன்படுத்தப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்ட வெல்லக்கட்டிகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் விற்பனை நிலையங்களிலிருந்தும் மீளப்பெறப்பட்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் கையளிக்க வேண்டும் எனவும் நீதவான் உத்தரவிட்டார். மேலும், தொழிற்சாலையைத் தொடர்ந்து நடத்துவதற்கும் நீதவான் அனுமதியளித்தார்.

ஊர்காவற்றுறை பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவனால், கடந்த 13ஆம் திகதி ஊர்காவற்றுறை பனை தென்னைவளக் கூட்டுத்தாபனத்தின் பனைவெல்லம் உற்பத்தி நிலையத்தில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, உரம் பயன்படுத்தி பனைவெல்லம் உற்பத்தி செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து, ஊர்காவற்றுறை பொதுச்சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன், ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார்.

மேற்படி வழக்கு கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பனைவெல்லம் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட 125 கிலோக் கிராம் உரத்தையும், அவ்வுரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட 114 கிலோக் கிராம் பனை வெல்லத்தையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நீதிமன்றத்தில் பாரப்படுத்தினார்.

# யாழ். அபிவிருத்தி மீளாய்வு மாநாடு

## ஜனாதிபதி தலைமையில்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் விரைவில் அபிவிருத்தி ஆய்வு மாநாடு நடைபெறவுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த அபிவிருத்தி ஆய்வு மாநாட்டுக்கு தலைமை தாங்கி நடத்தவுள்ளார்.

ஜனாதிபதியின் வருகைக்கான திகதி நிர்ணயிக்கப்படாத நிலையில் அபிவிருத்திக்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையினை யாழ். மாவட்ட அரச அதிபர் மேற்கொண்டு வருகிறார்.

கடந்த 8 ஆண்டுகளில் (2005 - 2013) காலப்பகுதியில் யாழ். குடாவில் முன்னெடுக்கப்பட்ட சகல உட்கட்டுமான அபிவிருத்தி சேவைகள், தொழிற்றுறைகள் மற்றும் கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, விவசாயம், உட்கட்டுமானம், பொறியியல் துறைகளில் ஏற்பட்ட அடைவு மட்டங்களின் விபரம் என்பன யாழ். மாவட்டத்தில் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல துறைகளும் துரிதவேகத்தில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2012 இல் இறுதியாக யாழ் மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு யாழ். செயலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (92)

# மகள் மீது தாக்குதல்; தாய் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், தொண்டைமானாறு, செல்வச்சந்நிதி ஆலயத்தில் வைத்து தனது 5 வயது மகளை கொடூரமான முறையில் தாக்கிய தாயொருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இளவாலை, பனிப்புலம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய தாயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட தாய், செல்வச்சந்திநி ஆலய வளாகத்தில் தனது 5 வயது மகளுடன் கற்பூரம் விற்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், இன்று காலை தனது தாயிடம் ஐஸ்கிறீம் வாங்கித் தருமாறு குறித்த 5 வயது சிறுமி கோரியுள்ளார். இதனையடுத்து அவர் தன் மகளை கடுமையாகத் தாக்கியுள்ளார். இதனால், அச்சிறுமியின் மூக்கு மற்றும் வாயால் இரத்தம் வடிந்துள்ளது.

இதனை அவதானித்த பொது மக்கள் உடனடியாக செல்வச்சந்நிதி உபபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த பெண்ணை கைது செய்ததுடன் சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

மேற்படி தாய் கடந்த ஜனவரி மாதம் 20ஆம் திக்தி தனது 5 வயது மகளையும் ஒன்றரை வயது மகனையும் கிணற்றுக்குள் போட்டுக் கொலை செய்ய முற்பட்டுள்ளார் என்றும் அயலவர்களின் முயற்சியால் அவ்விருசிறுவர்களும் காப்பாற்றப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் இளவாலை பொலிஸார் மேற்படி தாயை கைது செய்து, யாழ். சிறுவர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்திய வேளையில், மேற்படி பெண்ணை நீதிமன்றக் காவலில் வைத்து மனநல சிகிச்சையளிக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

# தாதியர்கள் 92 பேர் வடக்கில் நியமனம்

சுகாதார அமைச்சினால் வடமாகாணத்தில் 92 புதிய தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை, வடமாகாணத்தில் கடமையாற்றிய 46 தாதியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்வதாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ரவீந்திரன் நேற்று தெரிவித்தார்.

வடமாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற தாதியர்களுக்கான வரவேற்பு நிகழ்வும் நீண்டகாலமாக வடமாகாணத்தில் கடமையாற்றி வெளியிடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் தாதியர்களுக்கான பிரிவு உபசார நிகழ்வு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

புதிதாக நியமனம் பெற்றவர்கள் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட வைத்தியசாலைகளுக்கும், பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி ஆகிய ஆதார வைத்தியசாலைகளுக்கும் நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்கள் வடமாகாணத்தில் 5 வருடங்கள் தொடர்ந்து கடமையாற்ற வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாகாண சுகாதார பணிப்பாளர் திருமதி ஜெ.யூட், வடமாகாணப் பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஸ், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர்.கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (25)

# தகாத வார்த்தைப் பிரயோகம் தண்டம் விதிப்பு

(ஊர்காவற்றுறை)

யாழ். ஊர்காவற்றுறை பகுதியிலுள்ள மதுபானசாலையொன்றின் முன்பாக நின்று பொலிஸாரை தகாத வார்த்தைகளால் ஏசிய மூவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதவான் செல்வநாயகம் லெனின்குமார் நேற்று உத்தரவிட்டார்.

மதுபானசாலையின் முன்பாக நின்று மேற்படி மூவரும் நேற்று முன்தினம் இரவு சண்டையிட்டுள்ளனர்.

இதனைத் தடுக்கச் சென்ற பொலிஸாரை தகாத வார்த்தையால் மேற்படி நபர்கள் ஏசியுள்ளனர்.

இதனையடுத்து, மூவரையும் கைது செய்த பொலிஸார், மூவருக்கும் எதிராக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, நீதவான் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

# இணுவில் பகுதியில் டெங்கு தொற்று

(இணுவில்)

இணுவில் சிவகாமியம்மன் கோவிலடி காரைக்கால் எனும் பகுதியில் வசித்து வரும் ருத்திரன் திலக்சன் எனும் 8 வயது சிறுவன் டெங்கு நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுவன் காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இரத்தப் பரிசோதனை மேற்கொண்டதன் மூலம் இச்சிறுவனுக்கு டெங்குத் தொற்று ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடம் இதுவரை இணுவில் பிரதேசத்தில் 8 இற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக இப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதியெங்கும் சுகாதாரப் பகுதியினர் தீவிர டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது.

மேற்படி சிறுவன் வசித்து வந்த பகுதியெங்கும் வீடு வீடாகச் சென்று டெங்கொழிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். டெங்கு ஒழிப்பின் முதற்கட்டமாக மருந்து விசிறும் புணியினை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

சுகாதாரத் தொண்டர்களின் உதவியுடன் வீடுகள் தோறு சென்று விழிப்புணர்வு அறிவுரை வழங்கி வருகின்றனர். கழிவுப் பொருட்களை அழிக்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதையும் காணமுடிகிறது. (06)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 செப்ரெம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.